




PRGI No. TNBIL/25/A1569

வைகறையில் பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY








சென்னை மலர்: 01 இதழ்: 223 26.03.2026 வியாழக்கிழமை

Chennai | Volume: 01 | Issue: 223 | Thursday | pages 8 | Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMIL NADU AND PUDUCHERRY


## இன்றைய நாள்

வியாழக்கிழமை
(26-03-2026)
விசுவாவசு ஆண்டு, பங்குனி-12
பிறை: வளர்பிறை
திதி
அஷ்டமி பிற்பகல் 2.56 வரை பிறகு நவமி.
நட்சத்திரம்:
திருவாதிரை இரவு 7.05 வரை பிறகு புனர்பூசம்
யோகம்
மரண/அமிர்தயோகம்
ராகுகாலம்
நண்பகல் 1.30-3.00 மணி
எமகண்டம்
காலை 6.00-7.30 மணி.
சூலம் - தெற்கு.
நல்ல நேரம் :
காலை 9-10 மணி.
மாலை 4-5 மணி.

| | |
|---|---|
| மேஷம் | நன்மை |
| ரிஷபம் | வரவு |
| மிதுனம் | ஆதாயம் |
| கடகம் | சுகம் |
| சிம்மம் | பணிவு |
| கன்னி | புகழ் |
| துலாம் | தாமதம் |
| விருச்சிகம் | லாபம் |
| தனுசு | பணிவு |
| மகரம் | ஆதரவு |
| கும்பம் | வெற்றி |
| மீனம் | பயணம் |

# 9 நாட்களில் ரூ.179 கோடி பணம், பொருட்கள் பறிமுதல்: தலைமை தேர்தல் அதிகாரி தகவல்

**சென்னை, மார்ச் 26:**

தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: இந்திய தேர்தல் ஆணையம் மார்ச் 15-ம் தேதி பொதுத்தேர்தல் அறிவிப்பை வெளியிட்டதும் தேர்தல் நடத்தை விதிகள் உடனடியாக அமலுக்கு வந்துள்ளன.

இவை தமிழகத்தில் உள்ள 234 சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. நேற்று வரை, பொது இடங்களில் இருந்த 4,54,321 சுவர் விளம்பரங்கள், தனியார் இடங்களில் இருந்த 2,56,041 விளம்பரங்கள் அகற்றப்பட்டு, 544 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தேர்தல் நடத்தை விதிகளைத் தீவிரமாகக் கடைபிடிக்கவும், தேர்தல் விதிமீறல்களைத் தடுக்கவும் தமிழகம் முழுவதும் மொத்தம் 2,169 பறக்கும் படை குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் சி விஜில் செயலி மற்றும் பிற வழிகள் மூலம் பெறப்படும் புகார்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. முக்கிய இடங்கள் மற்றும் சோதனைச் சாவடிகளில் மொத்தம் 2,166 நிலையான கண்காணிப்புக் குழுக்கள் நிறுத்தப்பட்டுள்ளன.



> தேர்தல் நடத்தை விதிகளைத் தீவிரமாகக் கடைபிடிக்கவும், தேர்தல் விதிமீறல்களைத் தடுக்கவும் தமிழகம் முழுவதும் மொத்தம் 2,169 பறக்கும் படை குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பறக்கும்படை, நிலை கண்காணிப்புக் குழுக்கள் நடவடிக்கையில் இதுவரை, ரூ.34.64 கோடி ரொக்கம், ரூ.79 லட்சம் மதிப்பிலான மதுபானம், ரூ.6.76 கோடி மதிப்பிலான போதைப்பொருட்கள், ரூ.112.37 கோடி மதிப்பிலான தங்கம், வைரம், ரூ.24.22 கோடி மதிப்பிலான பரிசுப் பொருட்கள் மற்றும் இதர பொருட்கள் என ரூ.178.78 கோடி மதிப்பில் பணம் மற்றும் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

ஏப்.9-ம் தேதி காலை 7 மணி முதல் ஏப். 29-ம் தேதி மாலை 6.30 மணி வரை, வாக்குப்பதிவுக்கு பிந்தைய கருத்துக் கணிப்புகளை நடத்துவது மற்றும் அதனை அச்சு ஊடகம் அல்லது மின்னணு ஊடகம் வாயிலாக வெளியிடுவது அல்லது வேறு ஏதேனும் முறையில் பரப்புவது தடை செய்யப்படுகிறது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## சிலிண்டர் வழங்குவதும், வெளியுறவுக் கொள்கையும் மாநில அரசின் கையிலா இருக்கிறது? - முதல்வர் ஸ்டாலின்

**சென்னை, மார்ச் 26:**

சென்னை: மேற்காசிய போர் விளைவாக எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டு அது பொதுமக்களையும், தொழிலாளர்களையும் பாதிக்கும் நிலை உருவாகியுள்ள சூழலில், “சிலிண்டர் வழங்குவதும், வெளியுறவுக் கொள்கையும் மாநில அரசின் கையிலா இருக்கிறது?” என காட்டமாக வினவியுள்ளார் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின்.

இது தொடர்பாக முதல்வர் ஸ்டாலின் எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்த பதிவில் கூறியிருப்பதாவது: ‘கோவிட் காலத்தைப் போல’ என பிரதமர் பேசியதால், ஏற்கெனவே எரிவாயு தட்டுப்பாட்டால் தவிக்கும் மக்கள் மேலும் பீதிக்கு உள்ளாகியுள்ளனர். பெரும்பாலான உணவகங்கள் மூடப்பட்டு, தொழிலாளர்கள் வேலையிழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

தீவிர நடவடிக்கைகள் மூலம் இவற்றுக்குத் தீர்வு காண வேண்டிய ஒன்றிய பாஜக அரசு இதில் இருந்து செய்திகளைத் திசைதிருப்புவதற்காகவே தொகுதி மறுவரையறை SCRIPT-ஐத் தற்போது கையிலெடுத்துள்ளது. பாஜக ஜாடிக்கு ஏற்ற மூடியாக, மக்கள் பிரச்சினையை மறந்தும் பேசமாட்டோம்எனத்தங்களுக்குத் தாங்களே வாய்ப்பூட்டு போட்டுக்கொண்டுள்ள அதிமுகவோ, மாநில அரசு என்ன செய்கிறது எனக் கேட்கிறார்கள்.

சிலிண்டர் வழங்குவதும், வெளியுறவுக் கொள்கையும் மாநில அரசின் கையிலா இருக்கிறது? மாநில அரசு தன்னால் இயன்ற அத்தனை நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. “இத்தனைக்கும் பொறுப்பான ஒன்றிய பாஜக அரசு என்ன செய்கிறது?” என்பதே மக்கள் முன்வைக்கும் கேள்வி,” என்று முதல்வர் குறிப்பிட்டுள்ளார்.



முன்னதாக நேற்று (மார்ச் 24) மேற்காசியப் போரின் தாக்கங்களில் இருந்து இந்திய மக்களைப் பாதுகாக்க, மத்திய அரசு எடுத்துள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் என்ன என்று பிரதமர் நரேந்திர மோடிக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் கேள்வி எழுப்பியிருந்தார். இந்நிலையில், இன்று மீண்டும் சிலிண்டர் பிரச்சினையை முன்வைத்து முதல்வர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அனைத்துக் கட்சிக் கூட்டம்: மேற்கு ஆசியாவில் ஏற்பட்டுள்ள போர் காரணமாக, நம் நாட்டில் சமையல் எரிவாயு (எல்பிஜி) தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் உணவகங்கள் சிக்கலை எதிர்கொண்டு வருகின்றன.

இதனிடையே, இதுகுறித்து விவாதிக்க அனைத்துக் கட்சி கூட்டத்தை கூட்டுமாறு எதிர்க்கட்சித் தலைவர்கள் வலியுறுத்தி வந்தனர். காங்கிரஸ் மூத்த தலைவர் ஜெய்ராம் ரமேஷ், தற்போதைய மேற்கு ஆசிய மோதலை அரசு கையாளும் விதத்தை கடுமையாக விமர்சித்து இருந்தார்.

இந்நிலையில், இன்று (மார்ச் 25) மாலை அனைத்து கட்சி கூட்டத்துக்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது. இதில் மேற்கு ஆசிய போரால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது குறித்து விரிவாக விவாதிக்கப்படும் எனத் தெரிகிறது.

## அதிமுக முதற்கட்ட வேட்பாளர்கள் பட்டியல்

**சென்னை, மார்ச் 26:** அதிமுக முதற்கட்ட வேட்பாளர்கள் பட்டியல் விவரம் வருமாறு:

1. எடப்பாடி (86) : எடப்பாடி மு. பழனிசாமிகழகப் பொதுச் செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர்
2. வேப்பனஹள்ளி (54) : கே.பி. முனுசாமி, கழக துணைப் பொதுச் செயலாளர் முன்னாள் அமைச்சர்
3. திண்டுக்கல் (132) : திண்டுக்கல் ஊ. சீனிவாசன், கழகப் பொருளாளர் திண்டுக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர்.
4. நத்தம் (131) : நத்தம் இரா. விசுவநாதன், கழக துணைப் பொதுச் செயலாளர் திண்டுக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர்
5. தொண்டாமுத்தூர் (119) : எஸ். பி.வேலுமணி, கழக தலைமை நிலையச் செயலாளர் கோவை புறநகர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர்
6. குமாரபாளையம் (97) : பி. தங்கமணி, கழக அமைப்புச் செயலாளர் நாமக்கல் மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர்
7. ராயபுரம் (17) : டி.ஜெயக்குமார், கழக அமைப்புச் செயலாளர் வட சென்னை தெற்கு (கிழக்கு) மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர்
8. மைலம் (71) : சி.வி.சண்முகம், கழக அமைப்புச் செயலாளர் விழுப்புரம் மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர்
9. மதுரை மேற்கு (194) : செல்லூர் ராஜூ, கழக அமைப்புச் செயலாளர் மதுரை மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர்
10. பாலக்கோடு (57) : கே.பி. அன்பழகன், கழக அமைப்புச் செயலாளர் தருமபுரி மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர்
11. நன்னிலம் (169) : சு. காமராஜ், கழக அமைப்புச் செயலாளர் திருவாரூர் மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர்
12. வேதாரண்யம் (165) : ஓ.எஸ். மணியன், கழக அமைப்புச் செயலாளர் நாகப்பட்டினம் மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர்
13. விராலிமலை (179) : டாக்டர் சி. விஜயபாஸ்கர், கழக அமைப்புச் செயலாளர் புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர்
14. கோவில்பட்டி (218) : கடம்பூர் ராஜூ, கழக அமைப்புச் செயலாளர் தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர்
15. திருமங்கலம் (196) : ஆர். பி.உதயகுமார், கழக புரட்சித் தலைவி பேரவைச் செயலாளர் மதுரை புறநகர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர்
16. சிவகாசி (205) : கே.டி. ராஜேந்திரபாலாஜி, கழக அமைப்புச் செயலாளர் விருதுநகர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர்
17. மதுரவாயல் (7) : பா.பென்ஜமின், கழக அமைப்புச் செயலாளர் திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர்
18. கலசபாக்கம் (65) : அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, கழக விவசாயப் பிரிவுச் செயலாளர் திருவண்ணாமலை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர்
19. திருப்பரங்குன்றம் (195) : வி.வி. ராஜன் செல்லப்பா, கழக அமைப்புச் செயலாளர் மதுரை புறநகர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர்
20. பவானி (104) : கே.சி.கருப்பணன், ஈரோடு புறநகர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர்
21. ஜோலார்பேட்டை (49) : கே.சி. வீரமணி, திருப்பத்தூர் மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர்
22. கரூர் (135) : எம்.ஆர்.விஜயபாஸ்கர், கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர்
23. அரியலூர் (149) : தாமரை எஸ். ராஜேந்திரன் அரியலூர் மாவட்டக் கழகச் செயலாளர் அரசு முன்னாள் தலைமைக் கொறடா, ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

## NDA வேட்பாளர்களை ஆதரித்து புதுச்சேரியில் பிரதமர் மோடி 3-ந்தேதி ரோடு ஷோ

**புதுச்சேரி, மார்ச் 26:**

புதுச்சேரி நகர பகுதியில் நடைபெறும் ரோடு ஷோவில் பிரதமர் பங்கேற்று தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி வேட்பாளர்களை அறிமுகம் செய்து வைக்கிறார். இவ்வாறு அவர் கூறினார்.

# ஈரான் போர் தொடர்பாக பிரதமர் மோடியுடன் அமெரிக்க அதிபர் அதிபர் ட்ரம்ப் ஆலோசனை

**புதுடெல்லி, மார்ச் 26:**

அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டுப்படைகள் மற்றும் ஈரான் ராணுவத்துக்கு இடையே கடந்த பிப்ரவரி 28-ம் தேதி முதல் போர் நடைபெற்று வருகிறது. இதன் எதிர்வினையாக ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் ராணுவம் முழுமையாக மூடியிருக்கிறது. அந்த நாட்டு ராணுவத்தின் சிறப்பு அனுமதியுடன் சில சரக்கு கப்பல்கள் மட்டும் ஹார்முஸ் ஜலசந்தியை கடந்து செல்ல அனுமதி வழங்கப்படுகிறது.



இதனால் வளைகுடா நாடுகளின் கச்சா எண்ணெய், எரிவாயு போக்குவரத்து முடங்கி உலகம் முழுவதும் பெட்ரோல், டீசல், எல்பிஜி, எல்என்ஜி காஸுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டு உள்ளது.

இந்தச் சூழலில் பிரதமர் மோடியுடன் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் நேற்று தொலைபேசியில் முக்கிய ஆலோசனை நடத்தினார்.

இதுகுறித்து இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் செர்ஜியோ கோர் சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவில், “பிரதமர் மோடியுடன் அதிபர் ட்ரம்ப் தொலைபேசியில் பேசினார். மேற்கு ஆசிய நிலவரம் குறித்து இருவரும் ஆலோசித்தனர். ஹார்முஸ் ஜலசந்தியை திறப்பது குறித்தும் இருவரும் ஆலோசனை நடத்தினர்" என்று தெரிவித்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி சமூக வலைதளத்தில் நேற்று வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது:

அதிபர் ட்ரம்பிடம் இருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. மேற்கு ஆசியா நிலவரம் குறித்து இருவரும் ஆக்கப்பூர்வமான கருத்துகளைப் பரிமாறிக் கொண்டோம். மேற்கு ஆசியாவில் பதற்றத்தைத் தணித்து உடனடியாக அமைதியை ஏற்படுத்த இந்தியா முழு ஆதரவு அளிக்கிறது. ஒட்டுமொத்த உலகத்துக்காகவும் ஹார்முஸ் ஜலசந்தி திறக்கப்பட வேண்டும். அமைதி முயற்சி தொடர்பாக இருவரும் தொடர்ந்து தொடர்பில் இருப்போம். இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

## பாகிஸ்தான் சமரச முயற்சி?

இஸ்லாமாபாத்: மத்திய கிழக்கில் போரில் ஈடுபட்டு வரும் அமெரிக்கா-இஸ்ரேல், ஈரான் இடையே சமரச முயற்சியை ஏற்படுத்த பாகிஸ்தான் முயன்று வருவதாக ‘பைனான்சியல் டைம்ஸ்’ செய்தி வெளியிட்டுள்ளது.

பாகிஸ்தான் ராணுவத் தளபதி ஆசிம் முனீருக்கும் ஈரானுக்கும் இடையில் உள்ள நெருக்கமும், அமெரிக்க அதிபர் ட்ரம்ப்புடன் அவர் கொண்டுள்ள சுமுகமான உறவும் இந்தப் பேச்சு வார்த்தை முயற்சிக்கு அடிப்படையாக அமைந்துள்ளதாக அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரான் மீதான தாக்குதல்களைக் கண்டிக்கும் அதே வேளையில், பதற்றத்தை தணிக்க ராஜதந்திர ரீதியில் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும் என ஈரானிடம் பாகிஸ்தான் கோரி வந்தது.

இந்நிலையில், ட்ரம்ப் நிர்வாகத்தின் உயர் அதிகாரிகளுக்கும் ஈரானுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையை இந்த வாரத்திலேயே இஸ்லாமாபாத்தில் நடத்த பாகிஸ்தான் முன்வந்துள்ளதாக கூறப்படுகிறது. இதற்காக, பாகிஸ்தான் ராணுவத் தளபதி ஆசிம் முனீர் ஞாயிற்றுக்கிழமை அதிபர் ட்ரம்ப்புடன் பேசியதாகவும். மறுபுறம், பிரதமர் ஷபாஸ் ஷெரீப் திங்களன்று ஈரான் அதிபர் மசூத் பெசெஷ்கியானுடன் ஆலோசனை நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மேற்காசிய மோதல்; இலங்கை அதிபருடன் பிரதமர் பேச்சு

புதுடெல்லி, மார்ச் 26:

ஈரான் நாட்டை அமெரிக்காவும், இஸ்ரேலும் கூட்டாக இணைந்து வான்வழியாக கடந்த பிப்ரவரி 28-ந்தேதி கடுமையாக தாக்கின. ஈரானும் இதற்கு பதிலடி கொடுத்து வருகிறது. இதனால், மேற்காசியாவில் தொடர்ந்து பதற்ற நிலை நீடித்து வருகிறது. இந்த விவகாரம் பற்றி அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப்பை தொடர்பு கொண்டு, பிரதமர் மோடி இன்று பேசினார்.

அப்போது, ஹார்மூஸ் ஜலசந்தியை திறப்பது பற்றியும், கப்பல்களின் பாதுகாப்பான பயணம் உறுதி செய்யப்பட வேண்டிய அவசியம் பற்றியும் டிரம்ப்பிடம் பிரதமர் மோடி பேசினார். இந்நிலையில் பிரதமர் மோடி, இலங்கை அதிபர் அனுர குமார திசநாயகேவுடன் மேற்காசிய மோதல் தொடர்பாக தொலைபேசி வழியே இன்று பேசினார்.

இதுபற்றி எக்ஸ் வலைதளத்தில் அவர் வெளியிட்ட செய்தியில், மேற்காசியாவில் காணப்படும் சூழல் பற்றி இருவரும் ஆலோசித்தோம். உலகளாவிய எரிசக்தி பாதுகாப்பில் பாதிப்பு ஏற்பட கூடிய இடையூறுகளை பற்றி முக்கிய கவனம் செலுத்தி விவாதிக்கப்பட்டது.

இந்தியா மற்றும் இலங்கையின் எரிசக்தி ஒத்துழைப்பை வலுப்படுத்தவும் மற்றும் மண்டல பாதுகாப்பை மேம்படுத்தும் நோக்கில் அது தொடர்பாக, முக்கிய வளர்ச்சிக்கான திட்ட விசயங்களை மறுஆய்வு செய்தோம்.

நெருங்கிய மற்றும் நம்பிக்கைக்குரிய நாடுகள் என்ற அடிப்படையில், பகிரப்பட்ட சவால்களை எதிர்கொள்வது தொடர்பாக நெருங்கி பணியாற்றுவதில் நம்முடைய உள்ளார்ந்த ஈடுபாட்டை நாங்கள் இருவரும் மீண்டும் உறுதிப்படுத்தி கொண்டோம் என தெரிவித்து உள்ளார்.




## திருப்புல்லாணி உற்சவம்



2வது நாள் திருப்புல்லாணி உற்சவம்

## 15ம் ஆண்டு கும்பாபிஷேக & லட்சார்ச்சனை திருப்பாவாடை மகோற்சவம் விழா



**தஞ்சாவூர், மார்ச் 26:** தஞ்சாவூர் மகர்நோம்புச் சாவடி V.P. கோவில் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீதேவி பூதேவி ஸ்ரீ அலமேலு மங்கா ஸமேத ஸ்ரீ ப்ரஸன்ன வேங்கடேஸப் பெருமாள் திருக்கோவிலில் நேற்று முன்தினம் (23.03.2026) திங்கட்கிழமை காலை 5 மணியளவில் விஷேச திருமஞ்சனமும் காலை 8.30 மணியளவில் லட்சார்ச்சனை ஆரம்பம் மாலை 4.30 மணியளவில் லட்சார்ச்சனை பூர்த்தி மாலை 6 மணியளவில் திருப்பாவாடை சாற்றுதல், அதனை தொடர்ந்து தீபாராதனை விஷேச திருவாதானம் ஆகிய நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றது.

இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை கோவில் நிர்வாக பரம்பரை அறங்காவலர் திரு.B.S. சேஷாத்திரி அவர்கள், நித்ய பூஜை கைங்கர்ய & லட்சார்ச்சனை குழு மற்றும் உபயதார்கள் செய்து இருந்தனர்.

**செய்தி: தேனே T.P.குமரன், மகர்நோம்புச்சாவடி, தஞ்சாவூர்**

## “மநீம தேர்தலில் போட்டியிட வேண்டும்... ‘டார்ச்’சுக்கு அனுமதிப்பீர்!” - ஸ்டாலினுக்கு திருமாவளவன் கோரிக்கை



**சென்னை, மார்ச் 26:** ”மக்கள் நீதி மய்யம் தேர்தலில் போட்டியிடவேண்டும். தொகுதிகளின் எண்ணிக்கை எதுவானாலும் அவர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள ’டார்ச்’ சின்னத்தில்’ போட்டியிட அனுமதிக்க வேண்டும்” என முதல்வர் ஸ்டாலினுக்கு விடுதலைச்சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில்,“திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் தொகுதிப் பங்கீடு நிறைவுபெறும் தறுவாயில் உள்ளது. அடுத்து எந்த எந்த தொகுதிகள் என்பது குறித்த பேச்சுவார்த்தை தொடங்கவுள்ளது. இதுவும் மிக இலகுவாக விரைவாக நடந்தேறும்.

இந்நிலையில், திமுக கூட்டணியில் மக்கள் நீதி மய்யம் போட்டியிடாமல் கூட்டணியை ஆதரிக்கும் நிலை எடுத்திருப்பது ஏற்புடையதாக இல்லை. அக்கட்சியின் தலைவர் கமல்ஹாசன் தமிழ்ச் சமூகத்தின் நன்மதிப்பைப் பெற்ற ஒரு மகத்தான திரைக் கலைஞர். நான்கு சதவீத அளவிலான வாக்கு வங்கியைக் கொண்ட ஒரு அசியல் தலைவர். அவர் நம்மோடு மனமுவந்து களத்தில் நிற்பது தான் நமது கூட்டணிக்கு நலம் பயக்கும்.

மக்கள் நீதி மய்யம் மேற்கொண்டுள்ள இத்த நிலைப்பாடு குறித்தும், கூட்டணியில் நடந்தேறிய பேச்சுவார்த்தைகள் குறித்தும் விடுதலைச் சிறுத்தைகளின் கருத்துகளைக் கூட்டணியின் தலைவர் மு.க.ஸ்டாலின் மேலான பார்வைக்கு வெளிப்படையாக முன்வைப்பது எமது சனநாயகப் பொறுப்பு எனக் கருதுகிறோம்.

கருத்தியல் அடிப்படையிலும், கொள்கை பகைவர்களை வீழ்த்தி வெல்வதற்கான உத்திகளின் அடிப்படையிலும், தொலைநோக்குப்பார்வையோடு ஓரணியில் திரண்டு ’மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி’யாக நாம் பல ஆண்டுகளாக இயங்கி வருகிறோம்.

மக்கள் நீதி மய்யம் இத்தேர்தலில் போட்டியிடாது என முடிவெடுப்பது அவரது பெருந்தன்மையாகஇருக்கட்டும். மதவெறி எதிர்ப்பில் உறுதியாக நிற்கும் கருத்தியல் வலிமையும், நான்கு சதவீத அளவில் உறுதிப்படுத்தப்பட்ட ’வாக்கு வங்கி வலிமையும்’, தமிழ்ச் சமூகத்தில் பெரும் செல்வாக்குஎன்னும் உயரிய ’நன்மதிப்பு வலிமையும்’கொண்ட கமல்ஹாசன், ’அவ்வாறு விட்டு விடமாட்டோம்’ என அவரை அரவணைத்துக்கொள்ள வேண்டியது தங்களின் உயரிய மாண்பாக அமையட்டும்.

தொகுதிகளின் எண்ணிக்கை எதுவானாலும் அவர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள ’டார்ச்’ சின்னத்தில்’ போட்டியிட அனுமதித்து, கூட்டணியின் மீதான நன்மதிப்பையும் தங்களின் மீதான பெருமதிப்பையும் மென்மேலும் உயர்த்திட வேண்டும் என தோழமையோடும் தங்களின் உடன்பிறப்பு என்னும் உரிமையோடும் கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் ’வெல்வோம் ஒன்றாக’ என்கிற தங்களின் உன்னதம் வாய்ந்த சகோதரத்துவ முழக்கம் வெற்றிகரமாக முழுமையுறும்’ எனத் தெரிவித்துள்ளார்.

# அ.தி.மு.க. கூட்டணியில் பா.ஜ.க. போட்டியிடும் தொகுதிகள் விவரம் அறிவிப்பு



**சென்னை, மார்ச் 26:** மயிலாப்பூர், தளி, மொடக்குறிச்சி, உதகை, அவினாசி, கோவை வடக்கு, திருப்பூர் தெற்கு, கந்தர்வக்கோட்டை, புதுக்கோட்டை, திருப்பத்தூர், மதுரை தெற்கு, சாத்தூர், திருச்செந்தூர், வாசுதேவநல்லூர், ராதாபுரம், நாகர்கோவில், விளவன்கோடு, ஆவடி, திருவண்ணாமலை, தஞ்சாவூர், திருவாரூர், அறந்தாங்கி, மானாமதுரை, ராமநாதபுரம், குளச்சல், பத்மநாபபுரம், ராசிபுரம் ஆகிய தொகுதிகளில் பா.ஜ.க. போட்டியிடுகிறது.

ஒட்டன்சத்திரம், ஈரோடு மேற்கு, ராணிப்பேட்டை, கிள்ளியூர், கும்பகோணம் ஆகிய தொகுதிகளில் தமிழ்மாநில காங்கிரஸ் போட்டியிடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பூவை ஜெகன் மூர்த்தியின் புரட்சி பாரதம் கட்சிக்கு கீழ் வைத்தியான் குப்பம் (கே.வி.குப்பம்) தொகுதி ஒதுக்கீடு.

பல்லாவரம், குன்னம் ஆகிய தொகுதிகளில் ஐஜேகே போட்டியிடுகிறது.

ஜான் பாண்டியனின் த.ம.மு.க.கட்சி ராஜபாளையம் தொகுதியில் போட்டியிடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ராகுல் காந்தியின் பிரசார பயணம் திடீர் ரத்து



**கன்னியாகுமரி, மார்ச் 26:** கேரளம் மாநிலத்தில் ஏப்ரல் 9-ந் தேதி சட்டமன்ற தேர்தல் நடக்கிறது. தேர்தலுக்கு குறைந்த நாட்களே உள்ளதால், அரசியல் கட்சியினர் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி நாளை கோழிக்கோடு, வயநாடு, மலப்புரம் மாவட்டங்களில் உள்ள தொகுதியில் போட்டியிடும் காங்கிரஸ் தலைமையிலான ஜனநாயக முன்னணி வேட்பாளர்களை அறிமுகப்படுத்தி, ரோடு ஷோவில் பங்கேற்க இருந்தார்.

இந்நிலையில் ராகுல் காந்தி பிரசார பயணம் ரத்து செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் சோனியா காந்திக்கு நேற்று இரவு திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டதையடுத்து அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். அவரது உடல்நிலையை மருத்துவர்கள் கண்காணித்து வருகின்றனர்.

மருத்துவமனையில் சோனியா காந்தி அனுமதிக்கப்பட்ட நிலையில் ராகுல் காந்தி கேரளம் பிரசாரம் ரத்து செய்யப்பட்டுள்ளது.

ராகுல் காந்திக்கு பதிலாக காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கேரளாவிற்கு செல்கிறார் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

# டெல்லி: 48 ஆண்டுகளாக காங்கிரஸ் தலைமையகமாக இருந்த இடத்தை காலி செய்ய மத்திய அரசு நோட்டீஸ்



**புதுடெல்லி, மார்ச் 26:** 24, அக்பர் சாலை, டெல்லி.. இதுவே கடந்த ஆண்டு வரை காங்கிரஸ் தலைமையகத்தின் முகவரி.

1978 முதல் கடந்த 48 ஆண்டுகளாக டெல்லியில் உள்ள அக்பர் சாலையில் உள்ள பங்களா கட்டிடத்தில் காங்கிரஸ் கட்சியின் தேசிய தலைமையகம் செயல்பட்டு வந்தது.

கடந்த ஆண்டு ஜனவரியில் ITO அருகே உள்ள ’இந்திரா பவன்’ என்ற புதிய கட்டிடத்திற்கு காங்கிரஸ் தலைமையகம் மாற்றப்பட்டாலும், அக்பர் சாலை அலுவலகம் தொடர்ந்து பயன்பாட்டில் இருந்து வந்தது.

இந்நிலையில் டெல்லி அக்பர் சாலையில் உள்ள காங்கிரஸ் தலைமையகம் மற்றும் ராய்சினா சாலையில் உள்ள இளைஞர் காங்கிரஸ் அலுவலகம் ஆகியவற்றை வரும் மார்ச் 28 ஆம் தேதிக்குள் காலி செய்ய வேண்டும் என மத்திய அரசு நோட்டீஸ் அனுப்பி உள்ளது.

2015 ஆம் ஆண்டிலேயே அக்பர் சாலை பங்களா உள்ளிட்ட நான்கு அரசு கட்டிடங்களின் ஒதுக்கீட்டை மத்திய அரசு ரத்து செய்தது. இருப்பினும், காங்கிரஸ் கட்சி அங்கு செயல்பட்டு வந்த நிலையில் தற்போது நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

அரசு தரப்பில் கொடுக்கப்பட்டுள்ள இந்தக் கெடுவிற்கு எதிராக நீதிமன்றத்தை அணுக காங்கிரஸ் தலைமை முடிவு செய்துள்ளது.

அக்பர் சாலை பங்களா

1977 தேர்தலில் காங்கிரஸ் படுதோல்வி அடைந்து கட்சி உடைந்தபோது, இந்திரா காந்திக்கு ஆதரவாக இருந்த ஜி.வெங்கடசாமி தனது இந்த அரசு பங்களாவைத் தலைமையகமாக மாற்றிக்கொள்ள வழங்கினார்.

இங்கிருந்துதான் இந்திரா காந்தி மீண்டும் எழுச்சி பெற்று ஆட்சியைப் பிடித்தார்.

ராஜீவ் காந்தி, நரசிம்ம ராவ் மற்றும் மன்மோகன் சிங் ஆகியோர் பிரதமர்களாக இருந்த காலத்தில், காங்கிரஸ் கட்சியின் அனைத்து முக்கிய முடிவுகளும் இந்த அக்பர் சாலை அலுவலகத்தில்தான் எடுக்கப்பட்டன.

# ராஜபாளையம் தொகுதி கிடைக்காததால் நடிகை கவுதமி மீண்டும் ஏமாற்றம்



**சென்னை, மார்ச் 26:** நடிகை கவுதமி ஏற்கனவே பா.ஜ.க.வில் இருந்தார். கடந்த 2023-ம் ஆண்டில் பா.ஜ.க.வில் இருந்து விலகினார்.

பின்னர் 2024-ம் ஆண்டு அ.தி.மு.க.வில் இணைந்தார். அ.தி.மு.க.வில் நடிகை கவுதமிக்கு கொள்கை பரப்பு இணை செயலாளர் பதவி வழங்கப்பட்டது.

வருகிற சட்டசபை தேர்தலில் நடிகை கவுதமி விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் தொகுதியில் களமிறங்க தயாராகி வந்தார். ராஜபாளையம் தொகுதியில் போட்டியிட வாய்ப்பு கேட்டு விருப்ப மனுவும் அளித்தார்.

அ.தி.மு.க. தலைமை நடத்திய நேர்காணலிலும் பங்கேற்று ராஜபாளையம் தொகுதியில் போட்டியிட வாய்ப்பு கோரினார். இதனால் ராஜபாளையத்தில் போட்டியிட கவுதமிக்கு வாய்ப்பு கிடைக்கும் என்று கூறப்பட்டது. இந்த நிலையில் அ.தி.மு.க. கூட்டணியில் ஜான் பாண்டியன் கட்சிக்கு ராஜபாளையம் தொகுதி ஒதுக்கப்பட்டது.

ஜான்பாண்டியனுக்கு தென்காசி, திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர் மாவட்டங்களில் ஓரளவு செல்வாக்கு உள்ளது. எனவே ராஜபாளையம் பொதுத்தொகுதியாகஇருந்தாலும் கூட ஜான் பாண்டியன் கட்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

ஜான்பாண்டியன் கட்சிக்கு ராஜபாளையம் ஒதுக்கப்பட்டதால் நடிகை கவுதமிக்கு மீண்டும் ஏமாற்றம் ஏற்பட்டுள்ளது. கடந்த 2021 சட்டசபை தேர்தலின்போது கவுதமி, ராஜபாளையம் தொகுதியில் போட்டியிடும் திட்டத்தில் இருந்தார். கவுதமி ஆந்திராவை பூர்வீகமாக கொண்டவர்.

அதேபோல் ஆந்திராவை பூர்வீகமாகொண்ட ராஜுக்கள் சமூகத்தினர் ராஜபாளையம் தொகுதிக்குள் அதிகம் வசிக்கின்றனர். இதனால் அப்போது பா.ஜ.க.வில் இருந்த நடிகை கவுதமியை ராஜபாளையம் தொகுதி பொறுப்பாளராக பா.ஜ.க. நியமித்தது. கவுதமி களப்பணியை மேற்கொண்டு வந்தார்.ஆனால் 2021 தேர்தலின் போது அ.தி.மு.க.-பா.ஜ.க. கூட்டணியில் அப்போது அமைச்சராக இருந்த ராஜேந்திர பாலாஜி, சிவகாசி தொகுதிக்கு பதில் ராஜபாளையத்தில் களமிறங்கினார். இதனால் அப்போது நடிகை கவுதமிக்கான வாய்ப்பு நழுவியது. கடந்த 2023-ம் ஆண்டு கவுதமி பா.ஜ.க.வில் இருந்து விலக ராஜபாளையம் தொகுதியில் போட்டியிட வாய்ப்பு கிடைக்காததும் ஒரு காரணமாக இருந்தது.

இதனால் அ.தி.மு.க.வில் இணைந்து இந்த முறை ராஜபாளையம் தொகுதியில் களமிறங்க நினைத்த கவுதமிக்கு மீண்டும் ஏமாற்றமே கிடைத்துள்ளது. இதனால் கவுதமி மட்டுமின்றி, ராஜபாளையம் தொகுதியில் உள்ள கவுதமியின் ஆதரவாளர்களும் அதிருப்தியில் உள்ளனர்.

## திராவிட மாடல் 2.0-விலும் தோழமை தொடர்வோம்!- மு.க.ஸ்டாலின்



**சென்னை, மார்ச் 26:** தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பக்கத்தில் கூறியிருப்பதாவது:-

தோழமைக் கட்சிகளின் விருப்பத்தையும், புதிய கட்சிகள் நம் கூட்டணியில் இணைந்துள்ள சூழலையும் உணர்ந்து ஜனநாயகப்பூர்வமாகத் தொகுதிப் பங்கீட்டை நிறைவு செய்துள்ளோம்!

தோழமை இயக்கங்களுக்கு நான் அளித்துள்ள வெற்றி உத்தரவாதத்தை நிறைவேற்ற உடன்பிறப்புகள் ஒவ்வொருவரும் உறுதிபூண்டுள்ளதை நேர்காணலில் நன்குணர்ந்தேன்.

234 தொகுதிகளும் நம் தொகுதிகள்தான்! கூட்டணிக் கட்சிகளின் சின்னங்களும் நம் சின்னங்கள்தான்!

திராவிட மாடல் 2.0-விலும் தோழமை தொடர்வோம்! களத்தினில் வெல்வோம் ஒன்றாக!

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

## சட்டமன்ற தேர்தலில் போட்டியிட போவதில்லை

### வேல்முருகன் எம்.எல்.ஏ. அறிவிப்பு



**சென்னை, மார்ச் 26:** கடந்த சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் தமிழக வாழ்வுரிமை கட்சி இடம் பெற்றிருந்தது. அக்கட்சியின் தலைவர் வேல்முருகன் கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். வருகிற சட்டசபை தேர்தலில் அவர் தி.மு.க. கூட்டணியில் கூடுதல் இடம் வேண்டுமென கேட்டார். ஆனால் கூடுதல் இடங்கள் வழங்காததால் தி.மு.க. கூட்டணியில் இருந்து வேல்முருகன் வெளியேறினார்.

அவர் பண்ருட்டி அல்லது நெய்வேலி தொகுதியில் போட்டியிடுவார் என எதிர்ப்பார்க்கப்பட்டது. ஆனால் அவர் வருகிற தேர்தலில் போட்டியிட போவதில்லை என திடீரென அறிவித்துள்ளார். இது குறித்து அவர் இன்ஸ்டாகிராமில் பதிவிட்டு இருப்பதாவது:-

வருகிற தேர்தலில் நான் போட்டியிட போவதில்லை. பண்ருட்டி தொகுதியில் போட்டியிடமாறு கூறினாலும் நான் போட்டியிடமாட்டேன். முன்னணி தலைவர்களை நான் நிறுத்துவேன். வேறு தொகுதி ஒதுக்கினாலும் முன்னணி தலைவர்கள் போட்டியிடுவார்கள். நான் தமிழ்நாடு முழுவதும் பயணம் செய்து கட்சி பணிகளில் ஈடுபடுவேன்.

இவ்வாறு அதில் பதிவிட்டுள்ளார்.

## உடலை வாங்காமல் அரசியல் செய்வதா? – ஆகாஷ் மரண வழக்கில் உயர் நீதிமன்றம் காட்டம்





**மதுரை, மார்ச் 26:** “மானாமதுரை இளைஞர் ஆகாஷ் மரணம் தொடர்பான வழக்கில் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்ட பிறகும் உடலை வாங்காமல் அரசியல் செய்வதா?” என உயர் நீதிமன்றம் காட்டமாக கேள்வி எழுப்பியுள்ளது.

மதுரை மானகிரியைச் சேர்ந்த செல்வகுமார், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு: மானாமதுரையைச் சேர்ந்த இளைஞர் ஆகாஷின் மரணத்துக்கு காரணமான காவல் துறையினர் மீது எஸ்சி, எஸ்டி வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில் வழக்குப் பதிவு செய்து கைது செய்யவும், சிவகங்கை மாவட்ட காவல்துறையினரை இடமாறுதல் செய்யவும் உத்தரவிட வேண்டும் என்று மனுவில் கூறியிருந்தார்.

இது மனு நீதிபதிகள் சதீஷ்குமார், ஜோதிராமன் அமர்வில் விசாரணைக்கு வந்தது. அரசுத் தரப்பில், ‘கூடுதல் தலைமை வழக்கறிஞர் அஜ்மல் கான், அரசு குற்றவியல் வழக்கறிஞர் அன்பு நிதி ஆஜராகி, விசாரணை சிபிசிஐடிக்கு மாற்றப்பட்டுள்ளது. நீதித்துறை நடுவர் 196 பிரிவின் கீழ் வாக்குமூலம் பெற்றுள்ளார். விசாரணை சரியான முறையில் சென்று வருகிறது. அரசே தாமாக முன்வந்தே சிபிசிஐடிக்கு மாற்றியது. இந்த விவகாரம் தொடர்பான வழக்கை விசாரித்து தனி நீதிபதி தீர்ப்பை ஒத்திவைத்துள்ளார்.

வழக்கு விசாரணைக்கு வந்தபோது, ‘இறந்த இளைஞர் குடும்படுத்தினர் வைத்த கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டும், இதுவரை உடலைப் பெறவில்லை’ எனத் தெரிவிக்கப்பட்டது.

மனுதாரர் தரப்பில், ‘இதுவரை காவல் துறையினர் கைது செய்யப்படவில்லை என்பதாலேயே குடும்பத்தினர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்’ என தெரிவிக்கப்பட்டது.

அரசுத் தரப்பில், ‘7 காவல் துறையினர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். பொதுநல வழக்கு எவ்வாறு தவறாக பயன்படுத்தப்படுகிறது என்பதற்கு இது ஓர் உதாரணம். இது தொடர்பான புகார் மனு 22-ஆம் தேதி மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது. 23-ஆம் தேதி மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது’ எனத் தெரிவிக்கப்பட்டது.

மனுதாரர் தரப்பில், ‘அவசரம் கருதியே விரைவாக மனுத் தாக்கல் செய்யப்பட்டது’ எனத் தெரிவிக்கப்பட்டது.

அதற்கு நீதிபதிகள், ‘என்ன அவசரம்? உடலை பெற வேண்டாம் என தடுத்தது யார்? அதற்கு பொறுப்பு நீங்கள் தானே? நீதிமன்றத்தை உங்களின் தனிப்பட்ட விருப்பத்துக்காக பயன்படுத்த வேண்டாம் என எச்சரித்து, உடல் அழுகிவிட வேண்டும் என விரும்புகிறீர்களா?’ எனக் கேள்வி எழுப்பினர்.

தொடர்ந்து நீதிபதிகள், “இது போன்ற வழக்குகளை நீதிமன்றம் ஏற்க இயலாது. அனைத்து கோரிக்கைகளும் ஏற்கப்பட்டும், உடலை பெறாமல் இருப்பது ஏன்? உடலை பெற்று முறையாக இறுதி மரியாதை செய்ய வேண்டும். அதை விடுத்து உடலை வைத்து அரசியல் செய்வது ஏற்கத்தக்கது அல்ல.

இந்த வழக்கு வேறு காரணத்துக்காக தாக்கல் செய்துள்ளது போல் தெரிகிறது. தற்போது உடலை வைத்து போராட்டம் நடத்துவது ஃபேஷனாகி விட்டது. உடலுக்கு இறுதி மரியாதை செய்யப்பட வேண்டியது அடிப்படை உரிமை.

அதனை குடும்பத்தினர் உறுதி செய்ய வேண்டும். இந்த மனு விளம்பரத்துக்காக தாக்கல் செய்யப்பட்டது. மனு தள்ளுபடி செய்யப்படுகிறது” என உத்தரவிட்டனர்.

செக்யூரிட்டி கார்டுகள் தேவை

கோடம்பாக்கம் சேத்துப்பட்டு புரசைவாக்கம் கோட்டூர்புரம் பகுதிகளில் வேலை செய்ய செக்யூரிட்டி கார்டுகள் தேவை

அணுகவும்: 9840861539

ADVERTISE WITH US

CONTACT US 9438610756

WANTED: FEMALE ANCHORS

- Age 18 to 35
- Good Looking
- Work from Home (Full-time/Part-time)

Salary: Rs. 20,000 to 50,000

Call / Whatsapp:
7789941009
9337501889

சிவா விஷ்ணு திருமண தகவல் மையம்

அனைத்து இனத்தவர்களுக்கும்
முதல் மணம் • மறுமணம்
பொருத்தமான ஜாதகங்கள் அனுப்பப்படும்

மணமகன் • மணமகள் தேவைப்படும் அனைவருக்கும்
நம்பகமான மற்றும் விரைவான சேவை

✓ அனைத்து இனத்தவர்களுக்கும் பதிவு
✓ ஜாதக பொருத்தம் பார்த்து அனுப்பப்படும்
✓ முதல் திருமணம் & மறுமணம் வசதி
✓ உடனடி தொடர்பு & சிறந்த பொருத்தம்

தொடர்புக்கு: 9150989424

Special Invitation

to retired seniors house wives businessmen bankers CAs NRIs age.30 to 70.qualification SSLC/graduate

To restart your second Innings with a career business opportunity

♦ Flexible timing unlimited incentive

♦ No target work from home training provided For successful business.

Contact Mr. Irudaya Raj
Ph.9486634780

Vilambaram

We provide Targeted Leads to grow your buisness

Boost your business

Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com

keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre

INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology - Freshers

Internship:
- Clinical Training
- Counseling Practice
- Case Work

Jobs:
- Social Worker
- Jr Psychologist
- Rehab Counselor

Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com

ADIYOGI

REAL ESTATE WHOLESALE

VADACHENNAI CALL DRIVER

ஆதியோகி
ரியல் எஸ்டேட்
CMDA DTCP அப்ரூவல்
வீட்டுமனைகள் விற்பனை
_CONTACT_
8939228901

WANTED

JAY SECURITY FORCE

பணி வாய்ப்புகள்

- பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
- இடங்கள்:
  - பெருங்குடி, துரைப் பாக்கம்
  - காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
  - விருகம்பாக்கம்

பெண்கள் தேவை

சம்பளம்:- 12500 முதல் 20000 வரை

9791061354 - 8072969599

Head office
NO :1, அம்பாள் அவின்யு,
வி.பி.ஜி அவின்யு, விரிவாக்கம்,
மேட்டுக்குப்பம்- சென்னை-97

PREMIUM LAND SALE NEAR PARANDUR AIRPORT

YOU ARE LUCKY!
Grab Your Future Investment Today!
Location: Just 6 KM Near Parandur New Airport

Price Details
₹700 to ₹2200 per Sq.Ft
Affordable & High Return Investment

Why Invest Here?
- Fast Developing Area
- Near Upcoming Airport
- Excellent Appreciation Value
- Suitable for Residential & Investment
- Easy Road Access

PLOTS AVAILABLE NOW!
Contact: CT. Guruji
Phone: 90031 32847
LIMITED PLOTS - BOOK NOW!

WANTED

Site Supervisor required for construction work in Ambattur

Contact: 8428872887

WANTED

Needed female staff to look after children, patients.

Contact
9150989424

SEVEN STARS LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business

Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.

# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com

just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary Unilevel Matrix Board Generation ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

SADHANA DEVI.K
CAR WASH
SUPREME
Car Wash & Detailing
- Car Foam Pressure Wash
- Teflon Coating
- Ceramic Wax Treatment
- Under Chassis Painting
- Interior Foam Wash / Stain Remover
- Paint Correction / Protection

We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081.

WANTED

M/F லோடுமேன்,பிக்கர், ஹெல்பர்,
வர/மாத சம்ப்ளம்: 450-700. உணவு
இடம் free day/N8 shift

7540003588

அருள்தரும் தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
www.aruItharumdeivam.com

அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..

WANTED

Retd, VRS, Home Makers, NRIs, Business Person

Contact
8248951872

# கவிதை அரங்கம்!






எனக்குள்
தனிமையை
தவிடு பொடியாகி
விடுகிறது
உன் நினைவுகள்...

யாருமில்லா தனியரங்கில்
ஒரு குரல் போலே
நீ எனக்குள்ளே
எங்கோ இருந்து
நீ என்னை இசைக்கிறாய்

இப்படிக்கு உன் இதயம்

உன்னை
தேடி அலைந்திடும்
தேடலில் சுவாரஸ்யம்
குறையும் போது
உன் நினைவுகள்
என்னை தீண்டி
தேடலை
அதிகப்படுத்துகிறது

# வாழ்க்கை தத்துவம்...




பொறுமை மிக அவசியம்
வார்த்தையில்
வாழ்க்கையில்
வாகனத்தில்

தகுதிக்கு மீறி ஆசைப்படுவது
தவறில்லை ஆனால்
ஆசைப்பட்ட பிறகு அதை
அடைய உன் தகுதியை
வளர்த்து கொள்ளாமல்
இருப்பதே தவறு

வேடிக்கை பார்ப்பவர்கள்
என்ன நினைப்பார்கள் என்று
நினைப்பது மிகப்பெரிய
முட்டாள்தனம் ஏனென்றால்
அவர்களால் நமக்கு
எந்த பயனும் இல்லை

# இட்லிகடை




பாட்டி இட்லிக்கடைன்னா சுத்துப்பட்டு கிராமங்களில் எல்லாம் பேமஸ் தும்பைப்பூ கலரில் இலவம்பஞ்சுமாதரி ஸ்டார் ஓட்டலில்கூட இந்தமாதரி இட்லி கிடைக்காதுன்னு ஊரே பேசும் இத்தனைக்கும் இரண்டுவகை சட்னியோடு ஒரு சாம்பாரும் உளுந்தில் செய்த இட்லி பொடியும் சேர்த்தே ஒரு இட்லி இரண்டு ரூபாய்தான் அதனால் கூட்டம் அலைமோதும் காலையில் அஞ்சுமணிக்கு அடுப்பு பத்தவைத்து பத்துமணிக்கே கடையை சாத்திவிடும் பாட்டி,,, பாவம் பாட்டி உதவிக்கூட யாரையும் வைத்துக்கொள்ளவில்லை அதையும் பாட்டி விரும்பவில்லை எல்லாமே தன் கைப் பக்குவத்தில் இருக்கவேண்டும் என்ற பிடிவாதம்,

நேத்து காலையில பாட்டி கடை திறக்கும் முன்பே பக்கத்து கிராமத்திலிருந்து நாட்டாமை வந்தார் " என்ன பாட்டியம்மா சௌக்கியமா"

" ம்,,,இருக்கேப்பா என்ன இவ்வளு வெள்ளனம்மா வந்திருக்கே தம்பி"

" அது ஒன்னுமில்ல பாட்டி நம்ம நாகூரான் இல்ல அவன் பொண்டாட்டி இறந்துப்போச்சு அதான் ஒரு நூறு இட்லி வேணும் வாங்கிட்டு போகலாமுன்னு வந்தேன்"

" அடடா அந்த லட்சுமியா அவ நல்ல பொண்ணாச்சே ஏன் என்ன பன்னிச்சி இரண்டு புள்ளங்கள அனாதையா விட்டுட்டு போய்டாளே சண்டாலி"

என்ன பாட்டி செய்றது இரண்டு வாரமா ஒரே காய்ச்சல் சளி இருமல் அவனும் ஆஸ்பத்திரிக்கெல்லாம் கூட்டிட்டு அலைந்தான் கடைசில இப்படி ஆச்சு நம்ம கையில் என்ன இருக்கு பாட்டி நீங்க ஆக வேண்டியதை பாருங்க இந்த பாத்திரத்துல ஒரு நூறு இட்லியை பார்சல் பன்னுங்க எனக்கு நிறைய ஜோலி இருக்கு"

" இட்லி இல்லப்பா நானே நூறு நூத்தம்பத்து இட்லிதான் போடுவேன் உன்னக்கட்ட கொடுத்துட்டு வியாபாரத்துக்கு என்ன செய்வது தம்பி"

,"அடா இதுவும் வியாபாரம்தானே பாட்டி பணம் உடனே தரேன் கடன் வாங்குவேன்னு பயப்படதே"

"அதுக்கு இல்லப்பா உன்னக்கட்ட மொத்தமா கொடுத்திட்ட தெனமும் வந்து வாங்குறவங்க வந்து ஏமாந்து போய்டுவாங்க,,, இந்த ஊரில வேற கடையும் இல்ல உனக்கே தெரியம்ல எனக்கு தெனைக்கும் வர்றவங்கதான் முக்கியம் நீ வண்டியை எடுத்துக்கிட்டு டவுனுல போய் வாங்கிட்டு வந்திடப்பா கோச்சிக்காதப்பா "

நாட்டாமை பாட்டியை முறைத்துப்பார்தார்

பாட்டிச்சொன்னது

" என்னைப்பார்த்து என்ன செய்யப்போறப்பா நான் சொல்றது தவறா நீயும் நாட்டாமைதானே யோசித்துபாரு"

நாட்டாமை டவுனுக்கு விரைந்தார் இட்லி வாங்க,,,

பாட்டியின் நேர்மையை உணர்ந்தவராக,,,!

**நாகை ஆசைத்தம்பி**

கோவை

# சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*ஒருத்தன் சர்க்கரை வாங்கிகிட்டு வந்தானாம். ஆனா 100g சர்க்கரை குறைஞ்சு இருந்துச்சாம் ஏன்.?*

*விடை: ஏன்னா நடந்து வந்த Sugar குறைஞ்சிடும்ல அதான்.*

*சாப்பிட முடியாது கனி எது.?*

*விடை: பால்கனி.*



# தினம் ஒரு சமையல்



## கருவாடு குழம்பு

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| கருவாடு | - 10 நம்பர் |
| எண்ணெய் | - 2 தேக்கரண்டி |
| கடுகு | - 1 தேக்கரண்டி |
| சின்ன வெங்காயம் | - 10 |
| தக்காளி | - 2 |
| பூண்டு | - 7 |
| மிளகாய் தூள் | - 1 1/2 தேக்கரண்டி |
| தணிய தூள் | - 1 தேக்கரண்டி |
| தண்ணீர் | - தேவையான அளவு |
| உப்பு | - தேவையான அளவு |

செய்முறை:



முதலில் வெதுவெதுப்பான நீரில் கருவாடு சேர்ந்து 5 நிமிடங்கள் வைக்கவும்.

பிறகு அதை கழுவி எடுத்து கொள்ள வேண்டும்.

பின் ஒரு சட்டியில் எண்ணெய் சோர்ந்து கடுகு பெரிந்ததும் வெங்காயம், பூண்டு சேர்த்து நன்றாக வதக்கவும்.

வணங்கிய உடன் தக்காளி சேர்ந்து வதக்கவும்.

பிறகு அதில் எடுத்து வைத்த மசாலா தூள்களை சேர்ந்து கலந்து கொள்ள வேண்டும்.

தேவையான அளவு தண்ணீர் சேர்த்து உப்பு தேவைக்கேற்ப சேர்ந்து கலந்து கொள்ள வேண்டும்.

பின் தண்ணீர் கொதித்ததும் கழுவி வைத்த கருவாடு சேர்ந்து கலந்து கொள்ள வேண்டும்

பின் குழம்பு காய்ந்த உடன் இரக்கவும்.சுவையான கருவாடு குழம்பு தயார்.

# வெட்டிவேர் பயன்கள்



வெட்டி வேரினை எலுமிச்சை வேர் எனவும் கூறுவார்கள். நீர் கடுப்பு, தேக எரிச்சல், வயிற்றுக் கடுப்பு, போன்றவற்றால் அவதிப்படுபவர்கள் வெட்டிவேரை சுத்தம் செய்து உலர்த்திப் பொடி செய்து கொண்டு அதனுடன் பெருஞ்சீரகம் பொடி செய்து சம அளவு எடுத்து வெந்நீரில் 200 மி.கி. குடித்து வந்தால் தீர்வு கிடைக்கும்.

கோடையில் உஷ்ணத்தின் தாக்கத்தை குறைக்கும். வெட்டிவேரை நீரில் ஊறவைத்து அந்த தண்ணீரை தினமும் குடித்து வந்தால் உடல் சுடும், தாகம் தணியும்.

நாவறட்சி, தாகம், காய்ச்சல் மற்றும் வயிற்றில் ஏற்படும் நோய்களைக் கட்டுபடுத்தும். வாந்தி பேதிக்கும் இது நல்ல மருந்தாகும். மேலும் சளி தொந்தரவு ஏற்படாமல் இந்த வேர் பாதுகாக்கும்.

வெட்டிவேர் எண்ணெய்யை கொண்டு நீண்ட நாட்களாக ஆறாமல் இருக்கும் வடுக்கள் மீது தடவி வந்தால் அவை மறைந்துவிடும். இந்த எண்ணெய்யை தேய்த்து குளிக்கலாம். சீயக்காய்க்குப் பதில் வெட்டிவேரின் பவுடரை பயன்படுத்துங்கள். இதை தொடர்ந்து செய்தால் முகத்தில் எண்ணெய் வழியாது. முகம் கூடுதல் அழகுடன் காணப்படும்.

வெயில் காலத்தில் உண்டாகும் அதிக வியர்வை மற்றும் அரிப்பிற்கு வெட்டிவேரை நீரில் ஊறவைத்து, அரைத்து குளிக்கும் தண்ணீரில் கலந்து குளிக்கலாம். தீக்காயங்களில் வெட்டிவேரை அரைத்து பு சினால் காயங்கள் விரைவில் குணமாகும். கால் எரிச்சல், கால் வலி போன்றவற்றிற்கும் வெட்டிவேரை தேங்காய் எண்ணெயில் இட்டு காய்ச்சி, இரண்டு நாட்கள் கழித்து வடிகட்டி தொந்தரவு தரும் இடங்களில் பூசலாம். காய்ச்சலுக்கு பின்பு ஏற்படும் உடல் சோர்வுக்கு வெட்டி வேரை நீரில் இட்டு கொதிக்கவைத்து பருகவேண்டும். அந்த நீரை பருகுவதால் செரிமான ஆற்றல் அதிகரிக்கும். வயிற்றுப் புண்ணும் குணமாகும். முகத்தில் ஏற்படும் பருக்களை குறைக்க வெட்டி வேர் பயன்படுகிறது.

சிறு சிறு துண்டுகளாக்கின வெட்டிவேர் சிறுதளவையும், கொட்டை நீக்கிய கடுக்காய் ஒன்றையும் முதல் நாள் இரவே கொதிநீரில் ஊறவைத்து மறுநாள் அதை அரைத்து, அந்த விழுதை பருக்கள் மீது தடவி வந்தால் பருக்கள் இருந்த வடுவே தெரியாமல் அழிந்து விடும்.

# விஜய் போல் அவருடைய மகனும் தமிழ்நாட்டில்... வெளிப்படையாக பேசிய நடிகர் சஞ்சீவ்





நடிகர் விஜய் தற்போது முழுமையாக சினிமாவிலிருந்து விலகி அரசியலில் களமிறங்கியுள்ளார். வருகிற தமிழக சட்டமன்ற தேர்தலில் போட்டியிடவுள்ளார்.

மறுபக்கம் விஜய் நடிப்பில் கடைசியாக உருவான ஜனநாயகன் படம் சென்சார் சான்றிதழ் கிடைக்காததால் இதுவரை ரிலீஸ் ஆகாமல் இருக்கிறது. தேர்தல் முடிந்தபின்தான் ஜனநாயகன் வெளிவரும் என தற்போது உறுதியாக கூறப்படுகிறது.

விஜய்யின் நெருங்கிய நண்பர்களில் ஒருவர் சஞ்சீவ். இவர் சின்னத்திரையில் முன்னணி நடிகராக வலம் வந்தவர் என்பதை நாம் அறிவோம். மேலும், தற்போது ஜீ தமிழில் ஒளிபரப்பாகி வரும் கில்லாடி ஜோடிஸ் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கி வருகிறார்.

இந்த நிலையில், விஜய்யின் நண்பரும், பிரபல நடிகருமான சஞ்சீவ் பேட்டி ஒன்றில் விஜய்யின் மகன் சஞ்சய் குறித்து வெளிப்படையாக பேசியுள்ளார். அது தற்போது வைரலாகி வருகிறது.

“விஜய் ஆரம்பத்தில் சினிமாவிற்குள் வரும்போது எனக்கு நன்றாக தெரியும் பெரிய ஹீரோவா வருவான் என்று. அதே போல்தான் தற்போது விஜய்யின் மகன் ஜேசன் சஞ்சயின் குறும்படங்களை நான் பார்த்து இருக்கிறேன். விஜய் போலவே அவனும் தமிழக மக்கள் கிட்ட பெரிய பெயரை சம்பாதிப்பான் பாருங்க. விஜய் போல் அவருடைய மகனும் தமிழ்நாட்டில் மிகப்பெரிய ஆளாக கண்டிப்பாக ஒருநாள் வருவான்” என கூறியுள்ளார்.


சஞ்சய் தற்போது சிக்மா என்கிற படத்தை இயக்க சந்தீப் கிஷன் அதில் ஹீரோவாக நடித்துள்ளார். படம் விரைவில் வெளிவரவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.






சான்வே மேக்னா செம கிளாமர் ஆன உடையில் போஸ் கொடுத்திருக்கும் லேட்டஸ்ட் ஸ்டில்களை பாருங்க.

# ஒவ்வொரு இந்தியனும்.. துரந்தர் 2 படத்தை வியந்து பாராட்டிய ரஜினி






*சமீபத்தில் ரிலீஸ் ஆன துரந்தர் 2 படம் பாக்ஸ் ஆபிசில் வசூல் சாதனை படைத்து வருகிறது. 700 கோடியை வசூல் நெருங்கி இருக்கும் நிலையில் விரைவில் 1000 கோடியை வசூல் கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

*படத்தை பார்த்துவிட்டு பிரபலங்கள் பலரும் படக்குழுவை பாராட்டி வருகின்றனர். தற்போது அந்த வரிசையில் சூப்பர்ஸ்டார் ரஜினியும் படத்தை பார்த்து வியந்து பாராட்டி இருக்கிறார்.*

*தனது பதிவில் ரஜினி கூறி இருப்பதாவது.. “ துரந்தர் 2.. என்ன ஒரு படம்!!! ஆதித்யா தார் பாக்ஸ் ஆபிஸின் Baap!!! ரன்வீர் மற்றும் ஒட்டுமொத்த படக்குழுவினருக்கும் மனமார்ந்த வாழ்த்துக்கள். ஒவ்வொரு இந்தியனும் கண்டிப்பாக பார்க்க வேண்டிய படம். ஜெய் ஹிந்த்” என ரஜினி கூறி இருக்கிறார்.*

# அதிசயம் நிறைந்த அன்னை ஜ்வாலாமுகி!

ஹிமாச்சல பிரதேச மாநிலம், காங்ராவில் வீற்றிருக்கும் அருள்மிகு ஜ்வாலாமுகி திருக்கோவிலின் மெய்சிலிர்க்க வைக்கும் சிறப்புகள் இதோ:




**சக்தி பீடம்:** அன்னை ஆதிபராசக்தியின் 51 சக்தி பீடங்களில் இது 9-வது பீடம். சதி தேவியின் நாக்கு விழுந்த புனித தலம் இது.

**அதிசய தீச்சுடர்:** இங்கே அன்னைக்கு உருவம் கிடையாது. பாறை இடுக்குகளிலிருந்து தானாகவே தோன்றி எரியும் நீல நிறத் தீ ஜுவாலைகளையே அன்னையாக வழிபடுகிறோம்.

**எண்ணெய் இல்லை.. திரி இல்லை..:** பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக இந்தத் தீச்சுடர் எரிய எவ்வித எண்ணெயோ, திரியோ தேவையில்லை! அறிவியலாலும் விளக்க முடியாத ஆன்மீக அதிசயம் இது.

**9 வடிவங்கள்:** இங்கு ஒன்பது இடங்களில் ஜுவாலைகள் எரிகின்றன. பிரதான ஜுவாலை மகாகாளி என்றும், மற்றவை லட்சுமி, சரஸ்வதி, அன்னபூரணி உள்ளிட்ட பெயர்களிலும் வணங்கப்படுகின்றன.

**அக்பரின் காணிக்கை:** முகலாய அரசர் அக்பர் எவ்வளவோ முயன்றும் இந்தத் தீயை அணைக்க முடியாமல், பின் அன்னையின் சக்தியை உணர்ந்து இங்கு தங்கக் குடையைக் காணிக்கையாக அளித்தார்.

**நிவாரணம்:** மன வேதனைகள் நீங்கவும், திருஷ்டி மற்றும் எதிர்மறை சக்திகள் விலகவும் இத்தலம் ஒரு சிறந்த பரிகாரத் தலமாகும்.

**இடம்:** ஜ்வாலாமுகி, காங்ரா, ஹிமாச்சல பிரதேசம்.

**ஓம் சக்தி! பராசக்தி!**

தகவல்:
முனைவர்
**இராம.வேதநாயகம்.**

# தினம் ஒரு தலைவர்கள்
# கரீம் கனி வரலாறு

டி.எம்.அப்துல் கரீம் கானி தமிழ்நாட்டின் சிவகங்கை மாவட்டத்தில் பிறந்து இளமைப் பருவத்தில் பர்மாவிற்கு (இப்போது மியான்மர்) குடிபெயர்ந்தார். சூலியா சங்கத்தின் இளைஞர் சங்கத்தின் செயலாளராக நியமிக்கப்பட்டபோது அவரது நிறுவனத் திறன்கள் ஆரம்பத்திலேயே வெளிப்பட்டன. சூலியாக்கள் பெரும்பாலும் ஒரு காலத்தில் உலோக வேலைகளில் ஈடுபட்ட முஸ்லிம்கள். ( பர்மா முஸ்லிம்களில் சூலியா என்ற சொல் , ஒரு காலத்தில் இப்பகுதியில் ஆதிக்கம் செலுத்திய பேரரசான சோழரிடமிருந்து வந்தது என்று மோஷே யேகர் கூறுகிறார்).



கானிக்கு மொழிகள் மீது இருந்த மற்றொரு தெளிவான திறமை. ஒரு பத்திரிகையாளராக, அவர் தமிழ் மற்றும் பர்மிய பத்திரிகைகளில் பணியாற்றினார், மேலும் அந்த இரண்டு மொழிகளையும் அறிந்திருந்ததோடு, அரபு, உருது மற்றும் பின்னர் மலாய் மொழிகளையும் பேசும் வசதியும் அவருக்கு இருந்தது.

கரீம் கனி தென்கிழக்கு ஆசியாவில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஒரு அரசியல்வாதி . இரண்டாம் உலகப் போருக்கு முன்பு, கரீம் கனி பர்மாவில் முதல் பர்மா பிரதமர் (1937 1939) மற்றும் 1942 முதல் 1945 வரை பர்மா மாநிலத் தலைவராக இருந்த டாக்டர் பா மாவின் கீழ் நாடாளுமன்ற செயலாளராக இருந்தார்.

இரண்டாம் உலகப் போரின் போது , கனி சுபாஷ் போஸின் ஆசாத் ஹிந்த் அரசாங்கத்தின் அமைச்சராகி மலாயாவில் இருந்தார் . அவர் "தி முஸ்லிம் பப்ளிஷிங் ஹவுஸ்" இன் மேலாளராகவும், மலாயன் தமிழ் நாளிதழான மலாயா நன்பனின் ஆசிரியராகவும், சினரன் என்ற பெயரில் மலாய் பதிப்பான டானின் ஆசிரியராகவும் இருந்தார். கனி முஸ்லிம் லீக்கிலும் ஈடுபட்டிருந்தார், மேலும் அனைத்து மலாயா முஸ்லிம் மிஷனரி சொசைட்டியின் (AM-MMS) தலைவராகவும் , பல அமைப்புகளில் அதிகாரியாகவும் இருந்தார். இரண்டாம் உலகப் போர் முடிந்த பிறகு, கானி தென்கிழக்கு ஆசிய முஸ்லிம் அரசியலில் ஈடுபட்டார், குறிப்பாக 1950 இல் சிங்கப்பூரில் நடந்த மரியா ஹெர்டாக் கலவரத்தில் ஈடுபட்டார்.

பர்மாவில் செயல்பாடுகள்
கரீம் கனி பர்மாவில் தமிழ் மற்றும் பர்மிய செய்தித்தாள்களின் ஆசிரியராக இருந்தார். அவர் சூலியா சங்கத்தின் இளைஞர் கழகத்தின் செயலாளராக இருந்தார், மேலும் 1932 இல் பர்மா சட்டமன்றத்திற்கும் 1936 இல் பிரதிநிதிகள் சபைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டார். பிரிட்டிஷ் உளவுத்துறை அறிக்கையில் "உடனடியாக கைது செய்யப்பட வேண்டிய" நபர்களின் பட்டியலில் அவரது பெயர் சேர்க்கப்பட்டுள்ளது. இரண்டாம் உலகப் போருக்கு முன்பு கரீம் கனி டாக்டர் பா மாவின் கீழ் பர்மாவில் நாடாளுமன்ற செயலாளராக இருந்தார் .

மலாயாவில் செயல்பாடுகள்
இரண்டாம் உலகப் போரின் போது , கனி சுபாஷ் போஸின் ஆசாத் ஹிந்த் அரசாங்கத்தில் மாநில அமைச்சராக ஆனார் , மலாயாவில் இருந்தார். அவர் "தி முஸ்லிம் பப்ளிஷிங் ஹவுஸ்" இன் மேலாளராகவும், மலேசிய தமிழ் நாளிதழான மலாயன் நன்பனின் ஆசிரியராகவும், சினாரன் என்ற பெயரில் மலாய் பதிப்பான டானின் ஆசிரியராகவும் இருந்தார். கனி முஸ்லிம் லீக்கிலும் ஈடுபட்டார், மேலும் அனைத்து மலாயா முஸ்லிம் மிஷனரி சொசைட்டியின் தலைவராகவும், பல அமைப்புகளில் அதிகாரியாகவும் இருந்தார் . இரண்டாம் உலகப் போர் முடிந்த பிறகு , கனி தென்கிழக்கு ஆசிய முஸ்லிம் அரசியலில் ஈடுபட்டார், குறிப்பாக 1950 இல் சிங்கப்பூரில் நடந்த மரியா ஹெர்டாக் கலவரத்தில் ஈடுபட்டார் .

மரியா ஹெர்டாக் கலவரங்கள்
மரியா ஹெர்டோக் கலவரம் அல்லது நத்ரா கலவரம் 1950 டிசம்பர் 11 அன்று சிங்கப்பூரில் தொடங்கியது , அப்போது 13 வயதான மரியா ஹெர்டோக்கை (அல்லது பெர்த்தா ஹெர்டோக்) தனது தாயாகக் கருதிய அமினா பின்டே முகமதுவின் பராமரிப்பில் ஒரு முஸ்லீமாக வளர்க்கப்பட்ட பின்னர், அவரது உயிரியல் டச்சு கத்தோலிக்க பெற்றோருக்கு வழங்க நீதிமன்றத் தீர்ப்பைத் தொடர்ந்து . டிசம்பர் 13 ஆம் தேதி நண்பகல் வரை கலவரம் நீடித்தது, 18 பேர் கொல்லப்பட்டனர், 173 பேர் காயமடைந்தனர் மற்றும் பல சொத்துக்கள் சேதமடைந்தன - சிங்கப்பூரில் இதுவரை கண்டிராத மிக மோசமான சம்பவம். ஆகஸ்ட் 1950 இல் நீதிமன்றத் தீர்ப்பும், காவல் தொடர்பான சட்டப் போராட்டத்தின் பரவலான செய்திகளும் மலாயா மற்றும் தென்கிழக்கு ஆசிய முஸ்லிம் மக்களிடையே பரவலான கிளர்ச்சிகளைத் தூண்டின, அவர்கள் மரியாவை முஸ்லிம் நம்பிக்கையைப் பின்பற்றுபவராகக் கருதினர் மற்றும் பத்திரிகை செய்திகளை மரியாவை ஒரு கிறிஸ்தவராக சித்தரிப்பதாக விளக்கினர். நத்ரா அதிரடி குழு என்று தன்னை அழைத்துக் கொள்ளும் ஒரு அமைப்பு கரீம் கானியின் தலைமையில் முறையாக அமைக்கப்பட்டது. இந்த தீவிர அமைப்பு அதன் செய்தித்தாளான டான் ( டான் அல்ல , பாகிஸ்தானில் வெளியிடப்பட்ட ஒரு ஆங்கில செய்தித்தாள்) இன் இலவச நகல்களை விநியோகிப்பதன் மூலம் உள்ளூர் முஸ்லிம்களிடையே ஆதரவைக் கோரியது. டிசம்பர் 8 ஆம் தேதி சுல்தான் மசூதியில் கரீம் கானி ஒரு திறந்த உரையை நிகழ்த்தினார், அதில் அவர் ஜிஹாத்தை இறுதி முயற்சியாகக் குறிப்பிட்டார். கானியின் கருத்துகளைத் தொடர்ந்து டிசம்பர் 11 ஆம் தேதி தொடங்கி 13 ஆம் தேதி வரை பரவலான கலவரங்களும் வன்முறையும் தொடர்ந்தன. மொத்தத்தில், 18 பேர் கொல்லப்பட்டனர், அவர்களில் ஏழு ஐரோப்பியர்கள் அல்லது யூரேசியர்கள், இரண்டு காவல்துறை அதிகாரிகள் மற்றும் ஒன்பது கலவரக்காரர்கள் காவல்துறை அல்லது இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டனர், 173 பேர் காயமடைந்தனர், அவர்களில் பலர் படுகாயமடைந்தனர், 119 வாகனங்கள் சேதமடைந்தன, குறைந்தது இரண்டு கட்டிடங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து, இரண்டு வாரங்கள் 24 மணி நேர ஊரடங்கு உத்தரவு விதிக்கப்பட்டது, மேலும் முழுமையான சட்டம் ஒழுங்கு மீண்டும் நிலைநாட்டப்படுவதற்கு நீண்ட காலம் ஆனது.


ALAY student-teacher Mansor Adabi, 22, and Dutch girl Maria Hertogh, 13, who married on August 2. Maria's sarong is fuchsia and green. The jacket is of blue-and-white silk.

கலவரத்திற்குப் பிறகு, காவல்துறை ஒரு சிறப்பு புலனாய்வுப் பிரிவை அமைத்து 778 பேரைக் கைது செய்தது. அவர்களில் கரீம் கானியும் ஒருவர். இவர் நாத்ரா நடவடிக்கைக் குழுவின் பல உறுப்பினர்களுடன் கைது செய்யப்பட்டு, கலவரத்தில் ஈடுபட்டதற்காக அவசரகாலச் சட்டம் 20 இன் கீழ் 15 மாதங்கள் செயிண்ட் ஜான்ஸ் தீவில் உள்ள தடுப்பு முகாமில் வைக்கப்பட்டு, பின்னர் உடல்நலக் குறைவு காரணமாக விடுவிக்கப்பட்டார்.

மரியாவுக்காக சிங்கப்பூரைச் சேர்ந்த பிரபல வழக்கறிஞர் டேவிட் மார்ஷல் வாதாடினார். அவரது பிற்காலத்தில், "இந்த வழக்கு வேறு எந்த சூழ்நிலையிலும் விசாரிக்கப்பட்டிருந்தால் தீர்ப்பு வேறுவிதமாக இருந்திருக்கும்" என்று அவர் குறிப்பிட்டார். இந்த வழக்கின் போது ஆங்கிலேயர்கள் தங்கள் செல்வாக்கைத் தக்க வைத்துக் கொள்ள முயன்றனர், இது முஸ்லிம் கவலைகளை விட கிறிஸ்தவ நலன்களுக்கு சாதகமாக இருப்பதாக சிலர் கருதினர்.

கலவரத்தைத் தொடர்ந்து, முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் உட்பட ஏராளமான நபர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. அவர்களில் பல தமிழ் முஸ்லிம் தலைவர்களும் தூக்கிலிடப்பட்டனர். இந்த தமிழ் முஸ்லிம் வர்த்தகர்கள் புதிதாக சுதந்திரம் பெற்ற மலாயாவின் இஸ்லாமிய சின்னங்களாக இருந்தனர்.

தண்டனை பெற்ற அனைவரும் விடுவிக்கப்பட்டனர், ஆனால் பிரிட்டிஷ் அதிகாரிகள் கானியின் அரசியல் ஈடுபாடு காரணமாக அவரை காலனியில் இருந்து நீக்க முயன்றனர். இந்திய குடிமகனாக இருந்ததால், கானியை ஆங்கிலேயர்கள் இந்திய அரசாங்கத்திற்கு வழங்க முன்வந்தனர், ஆனால் அவரது சாதனை மற்றும் நடந்து வரும் தேர்தல் காலம் காரணமாக அவர்கள் மறுத்துவிட்டனர். பஷீர் மல்லால் பாகிஸ்தானில் உள்ள அவரது சில கூட்டாளிகளுடன் தொடர்பு கொண்டார், அதன் பிறகு உலக முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் இனாமல்லா கான் அவரை முறையாக கராச்சிக்கு அழைத்தார் . அவர் கராச்சியில் ஒரு பதிப்பாளராக தனது வாழ்க்கையை மீண்டும் தொடங்கினார். அந்த நேரத்தில் அவரது அரசியல் செயல்பாடு பாகிஸ்தானில் குறிப்பிடத்தக்க ஆதரவைப் பெறவில்லை. அவர் தொடர்ந்து ஆங்கிலேயர்களையும் அவர்களின் கொள்கைகளையும் விமர்சித்து வந்தார். ஹாஜி மைதீன் உள்ளிட்ட ஆதாரங்கள், கானி 1952 மற்றும் 1960 க்கு இடையில் பாகிஸ்தானில் காலமானார் என்று கூறுகின்றன, இருப்பினும் சரியான தேதி தெளிவாக இல்லை.

PRGI No. TNBIL/25/A1569
பேப்பர்பாய்
சென்னை வியாழக்கிழமை 26.03.2026

# சோனியா காந்தி மருத்துவமனையில் அனுமதி

**புதுடெல்லி, மார்ச் 26:**

காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி உடல்நலக் குறைவால் டெல்லியில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சோனியா காந்தியின் உடல் நிலையை மருத்துவர்கள் கண்காணித்து வருவதாகவும், பயப்படும் அளவிற்கு அவரது உடல்நலத்தில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்று மருத்துவர்கள் கூறியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுகுறித்து தகவலறிந்த வட்டாரங்கள் கூறியதாவது: "பருவநிலை மாற்றம் காரணமாக சோனியாவுக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டது. எனினும் அவர் கவலைக்கிடமான நிலையில் இல்லை. அவரின் உடல்நிலையை மருத்துவர்கள் குழு தொடர்ந்து கண்காணித்து வருகிறது."

சோனியா காந்தி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், அவரது மகனும் மக்களவை எதிர்க்கட்சி தலைவருமான ராகுல் காந்தி மற்றும் மகள் பிரியங்கா காந்தி வத்ரா ஆகிய இருவரும் உடனடியாக மருத்துவமனைக்கு விரைந்தனர். தாயாரை சந்தித்து உடல்நலம் விசாரித்த ராகுல் காந்தி, சிறிது நேரத்தில் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார்.

# 17 மாநில உயர் அதிகாரிகளுடன் தேர்தல் ஆணையம் ஆலோசனை

**புதுடெல்லி, மார்ச் 26:**

சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறும் மாநிலங்கள், யூனியன் பிரதேசம் மற்றும் அவற்றை ஒட்டிய மாநிலங்களின் உயர் அதிகாரிகள் குழுவினருடன் தேர்தல் ஆணையம் இன்று ஆலோசனை மேற்கொண்டது.




இது தொடர்பாக தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், "சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ள நான்கு மாநிலங்கள் மற்றும் ஒரு யூனியன் பிரதேசம் மற்றும் அதன் எல்லைகளில் அமைந்துள்ள 12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் தலைமைச் செயலாளர்கள், தலைமைத் தேர்தல் அதிகாரிகள், காவல்துறை தலைவர்கள் மற்றும் உயரதிகாரிகளுடன் தேர்தல் ஆணையம் இன்று ஆய்வுக்கூட்டம் நடத்தியது.

அப்போது, வன்முறையில்லாத, மிரட்டல் இல்லாத, தூண்டுதல் இல்லாத தேர்தல்களை உறுதி செய்யுமாறும், ஒருங்கிணைப்பை மேம்படுத்துமாறும் தேர்தல் ஆணையம் கேட்டுக்கொண்டது.

அசாம், கேரளா, தமிழ்நாடு, மேற்கு வங்கம், புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தல்கள் நடைபெறவுள்ள நிலையில், தேர்தல் ஆணையர்கள் எஸ் எஸ் சாந்து, விவேக் ஜோஷி ஆகியோருடன் இணைந்து தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் வாக்குப்பதிவுக்கான தயார்நிலை, சட்டம், ஒழுங்கு நிலைமை சட்டவிரோத ரொக்கம், மதுபானம், போதைப்பொருள், ஆயுதங்கள் ஆகியவற்றை கைப்பற்றியது குறித்தும் மாநிலங்களுக்கு இடையேயான எல்லைச் சாவடிகள் குறித்தும் ஆய்வு செய்தார்.

# சவாலான தருணங்களில் ஆதரவு; ஈரான் தூதரை சந்தித்து பாராட்டிய மத்திய அமைச்சர் ஜெய்சங்கர்

**புதுடெல்லி, மார்ச் 26:**

அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் அதன் தளங்கள் அமைந்த பகுதிகள் மீது கடுமையாக தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால், மேற்காசியாவில் தொடர்ந்து பதற்ற நிலை நீடித்து வருகிறது. ஈரானில் வசிக்க கூடிய இந்தியர்கள் பாதுகாப்பாக இந்தியாவுக்கு விமானம் வழியே வருவதற்கும் வழிவகை செய்யப்பட்டு உள்ளது. இந்நிலையில், மத்திய வெளிவிவகார துறைக்கான மந்திரி ஜெய்சங்கர் அவருடைய எக்ஸ் வலைதளத்தில் வெளியிட்ட செய்தியில், இந்தியாவுக்கான ஈரான் தூதர் டாக்டர் முகமது பதாலியை நேரில் சந்தித்து பேசினேன்.

அப்போது, மேற்காசியாவில் காணப்படும் மோதல் தொடர்பான விசயங்களை பற்றி இருவரும் கலந்து ஆலோசித்தோம். இந்த சவாலான தருணங்களில் ஈரானிலுள்ள இந்தியர்களுக்கு ஆதரவு அளித்ததற்காக நான் பாராட்டுகளை தெரிவித்து கொண்டேன் என தெரிவித்து உள்ளார்.

# இந்தியாவுக்கு எதிரான சதிச்செயல்: தடைசெய்யப்பட்ட அமைப்பின் தலைவிக்கு ஆயுள் தண்டனை


**புதுடெல்லி, மார்ச் 26:**

ஜம்மு-காஷ்மீரை சேர்ந்தவர் அசியா அன்ருபி (வயது 62). இவர் 1987ம் ஆண்டு துக்தரன் இ மிலட் என்ற அமைப்பை தொடங்கினார். இந்த அமைப்பின் மூலம் காஷ்மீரில் இந்தியாவுக்கு எதிரான சதிச்செயல்களில் ஈடுபட்டார். மேலும், பயங்கரவாதத்திற்கு ஆதரவான கருத்துகளை தெரிவித்து வந்தார். இந்தியாவுக்கு எதிராக வெறுப்பு பேச்சு, காஷ்மீர் பிரிவினைவாதத்திற்கு ஆதரவு, பயங்கரவாத செயல்களுக்கு ஆதரவு உள்பட பல்வேறு நடவடிக்கைகளை அசியா அன்ருபி தனது கூட்டாளிகளான நஹிதா நஸ்ரின் (வயது 58), சோபி பமிதா (வயது 48) ஆகியோருடன் ஈடுபட்டு வந்தார். இதையடுத்து, தேசத்திற்கு எதிரான சதிச்செயலில் ஈடுபட்ட வழக்கில் துக்தரன் இ மிலட் அமைப்பின் தலைவி அசியா அன்ருபி மற்றும் அவரது கூட்டாளிகள் நஸ்ரின், பமிதா என 3 பேரும் கடந்த 2018ம் ஆண்டு தேசிய பாதுகாப்பு முகமையால் (என்ஐஏ) கைது செய்யப்பட்டனர். அவரது அமைப்பான துக்தரன் இ மிலட்டிற்கு மத்திய அரசு தடை விதித்தது.

இந்நிலையில், சிறையில் அடைக்கப்பட்ட அசியா அன்ருபி உள்பட 3 பேர் மீதும் சதிச்செயல், பயங்கரவாதத்திற்கு ஆதரவு உள்பட பல்வேறு வழக்குகளில் டெல்லியில் உள்ள என்ஐஏ சிறப்பு கோர்ட்டில் விசாரணை நடைபெற்றது.

இந்த விசாரணையில் அசியா அன்ருபி மற்று அவரது கூட்டாளிகள் நஸ்ரின், பமிதா ஆகிய 3 பேரும் குற்றவாளிகள் என கோர்ட்டு தீர்ப்பளித்தது. மேலும், குற்றவாளி அசியா அன்ருபிக்கு ஆயுள் தண்டனையும் அவரது கூட்டாளிகள் நஸ்ரின் , பமிதாவுக்கு தலா 30 ஆண்டுகள் சிறை தண்டனையும் விதித்து கோர்ட்டு உத்தரவிட்டது.

# 'என்னை பாஸ் பண்ணுங்க' : வைரலாகும் மாணவரின் பதில் தாள்



**ஐதராபாத், மார்ச் 26:**

பெற்றோர் தங்கள் குழந்தைகள் நன்றாக படித்து நல்ல நிலைக்கு வர வேண்டும் என்ற ஆசையில் பெரிய கல்லூரிகளில் சேர்த்து, லட்சக்கணக்கில் கட்டணம் செலுத்துகின்றனர். ஆனால், சில மாணவர்கள் படிப்பை புறக்கணித்து மொபைல், ரீல்ஸ், சமூக வலைதளங்களில் நேரத்தை செலவழித்து தங்களது எதிர்காலத்தை கெடுத்துகொள்கிறார்கள்.

தேர்வை சரியாக எழுத முடியாத இத்தகைய மாணவர்கள், பல்வேறு வழிகளில் ஆசிரியர்களிடம் பாஸ் செய்ய வேண்டி முயற்சி செய்வதும் வழக்கமாக உள்ளது. சிலர் பதில் தாளில் பணம் வைப்பது போன்ற சம்பவமும் நடக்கின்றது.

இந்த நிலையில், தெலுங்கானா மாநிலத்தில் சமீபத்தில் முடிந்த இன்டர்மீடியட் தேர்வுகளின் மதிப்பீட்டின்போது அதிர்ச்சி சம்பவம் நிகழ்ந்துள்ளது.

மதிப்பீட்டாளர்கள் பதில் தாள்களை திருத்தும் போது, ஒரு மாணவர் எழுதியிருந்த வாசகங்கள் அவர்களை அதிர்ச்சியடைய வைத்திருக்கிறது. அந்த மாணவர், "சார்... எனக்கு அம்மா, அப்பா இல்லை. நீங்கள்தான் எனக்கு எல்லாம். தயவு செய்து என்னை பாஸ் பண்ணுங்கள். நான் படித்தது தேர்வில் வரவில்லை. நீங்கள் தான் என் கடவுள்" என்றும் ஆசிரியரின் காலில் விழுந்து வணங்கும் மாணவர் உருவத்தை வரைந்து, அதற்கு அருகில் 'சார்' மற்றும் 'நான்' என குறிப்பிட்டிம் இருந்தார். இந்த பதில் தாளின் புகைப்படம் சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது.

# உத்தர பிரதேசத்தில் 2 தமிழர்கள் டிஜிபியாக பதவி உயர்வு

**புதுடெல்லி, மார்ச் 26:**

உத்தர பிரதேசத்தில் ஐபிஎஸ் அதிகாரிகளான டி.பிரகாஷ், எல்.வி.ஆண்டனி தேவ் குமார் ஆகிய இரு தமிழர்களுக்கு டிஜிபியாக பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. இவர்களில் ஒருவர் மாநில காவல் துறைக்கு தலைமையேற்கும் வாய்ப்பு உள்ளது.





திருநெல்வேலி பாளையங்கோட்டையைச் சேர்ந்தவர் டி.பிரகாஷ். சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் பொது நிர்வாகத்தில் எம்.ஏ., எம்.பில். பட்டமும் பெற்றார். பேராசிரியர் பணிக்கு முயன்ற இவர், மத்திய அரசின் யுபிஎஸ்சி தேர்வை எழுதினார். அதில் 1994ல் அவரது முதல் முயற்சியிலேயே ஐபிஎஸ் கிடைத்தது. உ.பி.மாநில பிரிவில் பணி ஒதுக்கப்பட்டது. தற்போது, முதல்வர் யோகி ஆதித்யநாத் தலைமையிலான பாஜக ஆட்சியில் உ.பி. ரயில்வே ஏடிஜிபியாக அவர் சிறப்புடன் பணியாற்றி வந்தார். இந்நிலையில், அவருக்கு டிஜிபி பதவி உயர்வு அளிக்கப்பட்டு உள்ளது. இதுபோல் உ.பி.யில் ஐபிஎஸ் அதிகாரியாகப் பணியாற்றும் மற்றொரு தமிழர் எல்.வி ஆண்டனி தேவ் குமார். திருநெல்வேலி, திசையன்விளையை சேர்ந்த இவர், முதுகலையுடன் சட்டமும் பயின்றவர்.

யுபிஎஸ்சி தேர்வில் தீவிரம் காட்டி வந்த இவருக்கு 1994-ல் ஐபிஎஸ் கிடைத்தது. உ.பி. மாநிலப் பிரிவில் பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது. இவர் பணியில் நேர்மை காரணமாக எவரும் இல்லாத வகையில் அதிக முறை பணியிட மாற்றம் செய்யப்பட்டு வந்தார். உளவுத் துறையின் ஆக்ரா மாவட்ட கண்காணிப்பாளர் உள்ளிட்ட பல முக்கியப் பொறுப்புகளை ஆண்டனி வகித்துள்ளார். ராமர் கோயில் பாதுகாப்புக்காக புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள சிறப்பு பாதுகாப்பு படை தலைமை அதிகாரியாகவும் இருந்து அதை அமைத்தார். ஏடிஜிபியான ஆண்டனி தற்போது, மாநில காவல்துறை தலைமையகத்தின் ரூல்ஸ் அண்ட் மேனுவல்ஸ் பிரிவின் தலைமை அதிகாரியாக உள்ளார்.

# கேரளம்: தேர்தல் ஆணைய கடிதத்தில் பாஜக முத்திரை இருந்ததால் சர்ச்சை

**புதுடெல்லி, மார்ச் 26:**

நாட்டில் உள்ள அரசியல் கட்சிகளுக்கு கடந்த 2019-ஆம் ஆண்டு மார்ச் 19-ஆம் தேதியிட்ட கடிதத்துடன் தேர்தல் ஆணையம் அனுப்பிய எழுத்துபூர்வ சான்றில், அந்த ஆணையத்தின் முத்திரைக்குப் பதிலாக கேரள பாஜகவின் முத்திரை இருந்தது. இந்தச் சான்றை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி 'எக்ஸ்' தளத்தில் பகிர்ந்ததை தொடர்ந்து சர்ச்சை ஏற்பட்டது. அந்தச் சான்றில் பாஜக முத்திரை இருந்ததன் மூலம், தேர்தல் ஆணையத்தையும், பாஜகவையும் ஒரே அதிகார மையம் கட்டுப்படுத்துகிறது என்பதில் எந்த ரகசியமும் இல்லை என்றும் அக்கட்சி பதிவிட்டது. இதைத்தொடர்ந்து கேரள தலைமைத் தேர்தல் அதிகாரி வெளியிட்ட அறிக்கையில், 'தேர்தல் ஆணையக் கடிதத்தில் பாஜகவின் முத்திரை இருந்தது அந்தக் கடிதத்தை நகல் எடுக்கும்போது ஏற்பட்ட பிழையாகும். அது உடனடியாகக் கண்டறியப்பட்டு திருத்தப்பட்டது.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் குற்றப் பின்னணியை வெளியிடுவது தொடர்பாக 2019-ஆம் ஆண்டின் தேர்தல் ஆணைய வழிகாட்டுதல்கள் குறித்து சில விளக்கங்களைக் கோரி, அண்மையில் தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகத்தை கேரள பாஜகவினர் அணுகினர். அவர்களின் கோரிக்கை கடிதத்துடன், 2019-ஆம் ஆண்டின் வழிகாட்டுதல் நகலை அக்கட்சி சமர்ப்பித்தது.

அக்கட்சி வழங்கிய நகலில் பாஜகவின் முத்திரை இருப்பதை தேர்தல் ஆணையம் கவனிக்கத் தவறியதுடன், வழிகாட்டுதல்கள் குறித்து தெளிவுபடுத்த அந்த நகலை பிற அரசியல் கட்சிகளுக்கு தவறுதலாக விநியோகித்துவிட்டது. இந்தத் தவறை சரி செய்ய உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. நேர்மையாகவும் எந்த அழுத்தத்துக்கு உள்ளாகாமலும் தேர்தல் நடைமுறைகளை மேற்கொள்ள தேர்தல் ஆணையம் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது' என்று தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்த விசாரணை நிறைவடையும் வரை, இந்தப் பிழைக்குக் காரணமான உதவி பிரிவு அலுவலா் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக தலைமைத் தேர்தல் அதிகாரி 'எக்ஸ்' தளத்தில் பதிவிட்டார்.

# வீட்டு உபயோக சிலிண்டரின் எடை 10 கிலோவாக குறைப்பு என்பதில் உண்மையில்லை: மத்திய அரசு விளக்கம்

**புதுடெல்லி, மார்ச் 26:**

கியாஸ் சிலிண்டர்களை பதுக்கி வைப்பதும், கருப்புச் சந்தையில் விற்பனை செய்வதும் தடுக்கும் நோக்கத்தில் நாடு முழுவதும் அதிரடி சோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த நிலையில், வீட்டு உபயோக சிலிண்டர் எடை 10 கிலோவாக குறைக்கப்படும் என்ற செய்தி தீயாக பரவி வந்தது. இதுகுறித்து இது முற்றிலும் வதந்தி என மத்திய பெட்ரோலிய அமைச்சகம் விளக்கம் அளித்துள்ளது. மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் போர் பதற்றம் காரணமாக சமையல் கியாஸ் சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்படலாம் என்றும், அதை சமாளிக்க எண்ணெய் நிறுவனங்கள் சிலிண்டரின் எடையை குறைக்க திட்டமிட்டுள்ளதாகவும் வதந்திகள் பரவின. ஏற்கனவே வணிக பயன்பாட்டு சிலிண்டர் விநியோகம் நிறுத்தப்பட்ட நிலையில், வீட்டு உபயோக சிலிண்டரின் எடையும் குறைக்கப்படும் என்ற தகவல் பரவியதால் பொதுமக்கள் அதிர்ச்சியடைந்தனர். இந்த நிலையில், மத்திய பெட்ரோலிய அமைச்சகத்தின் இணை செயலாளர் சுஜாதா சர்மா கூறியதாவது: "வீட்டு உபயோக சிலிண்டர் எடை 14.2 கிலோவிலிருந்து 10 கிலோவாக குறைக்கப்படும் என்ற தகவலில் உண்மையில்லை. இறக்குமதி பாதிப்பால் தட்டுப்பாடு ஏற்பட்டாலும், எடையை குறைக்கும் எந்த திட்டமும் இல்லை. சிலிண்டர் தட்டுப்பாடு மற்றும் எடை குறைப்பு குறித்து பரவும் தகவல்கள் அனைத்தும் வெறும் யூகங்களே. பொதுமக்கள் இத்தகைய ஆதாரமற்ற வதந்திகளை நம்ப வேண்டாம் என்று தெரிவித்தார்.

# மூன்றாம் பாலினத்தவா் சட்டத் திருத்த மசோதா: மக்களவையில் நிறைவேற்றம்

**புதுடெல்லி, மார்ச் 26:**

'மூன்றாம் பாலினத்தவா்' (திருநங்கை-திருநம்பி) என்ற வார்த்தைக்கு துல்லிய வரையறை அளிப்பதுடன், அந்த பாலினத்தவருக்கு இழைக்கப்படும் குற்றங்களின் தீவிரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் தண்டனைகளை அதிகரிக்க செய்யும் நோக்கில் இவா்களுககான 2019-ஆம் ஆண்டு சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளும் நோக்கில் 'மூன்றாம் பாலினத்தவா் (உரிமைகள் பாதுகாப்பு) திருத்த மசோதா 2026' என்ற மசோதாவை மத்திய அரசு கொண்டுவந்தது.

'தற்போதுள்ள சட்டத்தின் பலன்கள் மற்றும் பாதுகாப்பு முழுமையாகச் சென்றடைய வேண்டிய மூன்றாம் பாலினத்தவரை முறையாகவும், உறுதியாகவும் அடையாளம் காண்பதற்குத் துல்லியமான வரையறை மிகவும் அவசியம் என்றும் மசோதாவில் வலியுறுத்தப்பட்டது.

இதன் மீது விவாதம் நடத்தி, ஒப்புதல் பொறுவதற்காக அந்த மசோதாவை, மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சா் வீரேந்திர குமாா் மக்களவையில் செவ்வாய்க்கிழமை தாக்கல் செய்தாா். அப்போது பேசிய அவா், 'சட்டத்தின் பலன்கள் உரிய பயனாளிகளுக்கு சென்றடைவதை உறுதிப்படுத்த 'மூன்றாம் பாலினத்தவா்' என்பதற்கான துல்லியமான வரியறை வகுக்கப்படுவது அவசியம். அதற்காகவே இந்த மசோதா அறிமுகம் செய்யப்படுகிறது. இவா்களுக்கென தனி மருத்துவ வாரியம் உருவாக்கப்படுவதையும் இந்த மசோதா வகை செய்கிறது. மாவட்ட ஆட்சியா்கள் சாா்பில் இவா்களுக்கென அடையாள அட்டைகளும் வழங்கப்படும்' என்றாா்.

விவாதத்தில் பங்கேற்ற காங்கிரஸ் எம்.பி. ஜோதிமணி பேசுகையில், 'மூன்றாம் பாலினத்தவரின் அடையாளத்தை உறுதிப்படுத்த மருத்துவ வாரியம் அமைக்கப்படுவது என்பதும், அவா்களுக்கான துல்லியமான வரையறையை வகுப்பது என்பதும் ஜனநாயக நடைமுறை அல்ல; மாறாக, பிரதமா் மோடி அரசின் சா்வாதிகார நடவடிக்கையாகும். இதுதொடா்பாக, மூன்றாம் பாலினத்தவரின் விரிவான கருத்துகளைப் பெறும் வகையில், இந்த மசோதா நாடாளுமன்ற நிலைக் குழு ஆய்வுக்கு பரிந்துரைக்கப்பட வேண்டும்' என்றாா்.


'பாலின அடையாளத்தை சுய நிா்ணயம் செய்துகொள்ளும் உரிமையில் மத்திய அரசு தலையிடுகிறது' என்று குறிப்பிட்ட திமுக உறுப்பினா் தமிழச்சி தங்கபாண்டியன், 'இந்த மசோதா நாடாளுமன்ற நிலைக் குழு ஆய்வுக்கு அனுப்பப்பட வேண்டும்' என்று வலியுறுத்தினாா்.


விவாதங்களுக்கு பதிலளித்த மத்திய அமைச்சா் வீரேந்திர குமாா், 'மூன்றாம் பாலினத்தவா் சட்ட அங்கீகாரம் மற்றும் பாதுகாப்பைப் பெறுவதை இந்த மசோதா தொடா்ந்து உறுதி செய்யும். என்றாா்.

அதைத் தொடா்ந்து, எதிா்க்கட்சிகள் முன்வைத்த ஆட்சேபங்கள் மற்றும் திருத்தங்கள் நிராகரிக்கப்பட்டு, மசோதாவை குரல் வாக்கெடுப்புக்கு அவைத் தலைவா் அனுமதித்தாா். அதில், அதிகமானோா் ஆதரவளித்ததைத் தொடா்ந்து, மசோதா நிறைவேற்றப்பட்டதாக அவைத் தலைவா் அறிவித்தாா்.

# கருணைக் கொலை நடவடிக்கைக்கு உள்ளான ஹரிஷ் ராணாவின் உயிர் பிரிந்தது

**லக்னோ, மார்ச் 26:**





உத்தர பிரதேச மாநிலம், காஜியாபாத்தைச் சேர்ந்த பஞ்சாப் பல்கலைக்கழக மாணவரான ஹரிஷ் ராணா கடந்த 2013-ம் ஆண்டில் 4-ஆவதுமாடியில்விளையாடிக் கொண்டிருந்தபோது கீழே தவறி விழுந்தார். இதில் அவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து, கடந்த 13 ஆண்டுகளாக அவர் கோமாவில் சிகிச்சை பெற்று வந்தார். அவரது உடல்நிலையில் எந்த முன்னேற்றமும் இல்லாத நிலையில் ஹரிஷை கருணைக் கொலை செய்ய அனுமதிக்கக் கோரி, சுப்ரீம் கோர்ட்டில் அவரின் பெற்றோர் ரிட் மனு தாக்கல் செய்தனர். மனுவை விசாரித்த சுப்ரீம் கோர்ட்டு அவருக்கு அளிக்கும் சிகிச்சையை நிறுத்த அனுமதியளித்தது. இந்த விவகாரத்தை மனிதாபிமான முறையில் அணுகுவது அவசியம். ஆதலால் சம்பந்தப்பட்ட நபரின் கண்ணியத்துக்கு எந்த பங்கமும் ஏற்படாமல் அவருக்கான சிகிச்சையை நிறுத்துவது தொடர்பான திட்டம் செயல்படுத்தப்படுவதை டெல்லி எய்ம்ஸ் உறுதி செய்ய வேண்டும். கருணைக் கொலை தொடர்பான சட்டத்தைக் கொண்டுவருவது குறித்து மத்திய அரசு பரிசீலிக்க வேண்டும் என தீர்ப்பளிக்கப்பட்டது. நாட்டில், கருணைக் கொலை செய்ய சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பளித்திருப்பது வரலாற்றில் இதுவே முதல்முறை ஆகும். இந்தநிலையில், மாடியில் இருந்து விழுந்து 13 ஆண்டுகள் கோமாவில் இருந்த காசியாபாத் இளைஞர் ஹரிஷ் ராணாவின் (31) உயிர் பிரிந்தது. கடந்த 14ம் தேதி டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உயிர் காக்கும் கருவிகள் நிறுத்தப்பட்ட நிலையில், 10 நாட்களில் உயிரிழந்துள்ளார்.

# மகளிருக்கு ஆண்டுக்கு ரூ.40,000 உதவித்தொகை- அகிலேஷ் யாதவ் அறிவிப்பு

**புதுடெல்லி, மார்ச் 26:**

உத்தர பிரதேசத்தில் அடுத்த ஆண்டு நடைபெறும் சட்டப்பேரவைத் தேர்தலை பெண்களின் முன்னேற்றம், அவர்களை பொருளாதாரரீதியாக மேம்படுத்துவது ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு எதிர்கொள்ள இருக்கிறோம். இதன்மூலம் மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியும் உறுதி செய்யப்படும். எனவே, பேரவைத் தேர்தலின்போது பெண்களை மையப்படுத்தி பல திட்டங்கள் அறிவிக்கப்படவுள்ளன. முக்கியமாக விளிம்புநிலையில் உள்ள பெண்களுக்கு ஆண்டுக்கு ரூ.40,000 உதவித்தொகை வழங்கப்படும்.




## கடன் செலுத்தாததால் ஜப்தி செய்யப்படவிருந்த வீட்டை குத்தகைக்கு விட்டு ரூ.20 லட்சம் மோசடி செய்தவர் கைது

**சென்னை, மார்ச்.26:** கடன் செலுத்தாததால் ஜப்தி செய்யப்படவிருந்த வீட்டை குத்தகைக்கு விட்டு ரூ.20 லட்சம் மோசடி செய்தவர் கைது செய்யப்பட்டார். கடலூரைச் சேர்ந்தவர் தீபக் (29). இவர், கடந்த 2024-ம் ஆண்டு சென்னையில் வாடகைக்கு வீடு தேடி கொண்டிருந்தார்.

அப்போது, முகப்பேர் மேற்கு, வள்ளலார் தெருவைச் சேர்ந்த ராஜகோபாலன் (59) என்பவரது அறிமுகம் கிடைத்தது. அவர், முகப்பேர், பன்னீர் நகரில் தனக்கு சொந்தமான அடுக்குமாடி குடியிருப்பில் வீடு உள்ளதாகவும், அந்த வீட்டை ரூ.20 லட்சத்துக்கு குத்தகைக்கு தருவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, ரூ.20 லட்சத்துக்கு குத்தகை ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. தீபக் பணத்தை ராஜகோபாலனிடம் கொடுத்துள்ளார். இதையடுத்து, 2024 ஜூன் மாதம் முதல் குத்தகைக்கு வசித்துள்ளார். இந்நிலையில், நீதிமன்றத்தில் இருந்து வீட்டை காலி செய்து ஒப்படைக்கும்படி ஜப்தி நோட்டீஸ் வந்துள்ளது.

அதாவது, ராஜகோபாலன் 2017-ம் ஆண்டு அந்த வீட்டை தனியார் நிதி நிறுவனத்தில் அடமானம் வைத்து, சுமார் ரூ.78 லட்சத்துக்கு கடன் பெற்று கடனை செலுத்தாததால், சம்பந்தப்பட்ட நிதி நிறுவனம் ராஜகோபாலனுக்கு நோட்டீஸ் அனுப்பியும் பணம் செலுத்தவில்லை.

நிதி நிறுவனம் வீட்டை ஏலத்தில் விட்டு, ஏலத்தில் எடுத்த நிறுவனம், நீதிமன்றம் மூலம் வீட்டை ஜப்தி செய்ய நோட்டீஸ் அனுப்பியிருந்தது தெரியவந்தது. இதையடுத்து, ராஜகோபாலன் வெளியேற்றப்பட்டார். பின்னர், தான் கொடுத்த குத்தகை பணத்தை திரும்ப கொடுக்கும்படி தீபக் கேட்டுள்ளார்.

ஆனால், ராஜகோபாலன் பணத்தை திருப்பி தராமல் இழுத்தடித்தள்ளார். இதையடுத்து, இந்த விவகாரம் தொடர்பாக, தீபக் நொளம்பூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.

அதன்படி, போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர். இதில், புகார் உண்மை என தெரியவந்ததையடுத்து, ராஜகோபாலனை போலீஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர். இவர் மீது ஏற்கனவே காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஒரு மோசடி வழக்கு உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## சென்னை விமான நிலையத்தில் ரூ.5 கோடி மதிப்புள்ள உயர்ரக கஞ்சா பாக்கெட்டுகள் பறிமுதல்

**சென்னை, மார்ச்.26:** சென்னை விமான நிலையத்தில் ரூ.5 கோடி மதிப்புள்ள உயர்ரக கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது. வியட்நாமிலிருந்து புரூனே வழியாக கஞ்சாவை கடத்தி வந்த வடமாநில இளைஞரை சுங்கத்துறையினர் கைது செய்தனர்.

தமிழக சட்டசப்பேரவை தேர்தல் ஏப்ரல் 23-ம் தேதி நடைபெறுவதையொட்டி, தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமுலில் இருப்பதால், சென்னை விமான நிலையத்தில் சுங்கத் துறையினருக்கு தேர்தல் ஆணையம் கொடுத்த அறிவுறுத்தலின்படி, சென்னைக்கு வரும் அனைத்து விமான பயணிகளையும் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர்.

இந்நிலையில், புரூனே நாட்டில் இருந்து ராயல் புரூனே ஏர்லைன்ஸ் பயணிகள் விமானம் சென்னைக்கு நேற்று முன்தினம் இரவு வந்தது. அந்த விமானத்தில் வந்த பயணிகளின் உடைமைகளை சுங்கத்துறை அதிகாரிகள் சோதனை செய்து அனுப்பி கொண்டிருந்தனர். அப்போது 25 வயதுடைய வடமாநில இளைஞர் மீது அதிகாரிகளுக்கு சந்தேகம் ஏற்பட்டது.

புரூனே வழியாக முதல்முறை டெல்லியில் இருந்து வியட்நாம் நாட்டுக்கு சுற்றுலா சென்றுவிட்டு, வியட்நாமில் இருந்து புரூனே நாடு வழியாக வந்த அவரின் சூட்கேசை அதிகாரிகள்சோதனை செய்தனர்.

அதில், ரூ.5 கோடி மதிப்புள்ள பதப்படுத்தப்பட்ட விலை உயர்ந்த, ஹைட்ரோபோனிக் கஞ்சாவை மறைத்து வைத்திருந்ததை அதிகாரிகள் கண்டுபிடித்தனர். இதையடுத்து, கஞ்சாவை பறிமுதல் செய்த அதிகாரிகள், இளைஞரை கைது செய்தனர்.

விசாரணையில், அவர் கடத்தல் குருவியாக செயல்பட்டது தெரியவந்தது. வழக்கமாக தாய்லாந்து, இலங்கை, அரேபிய நாடுகளில் இருந்து தான் உயர்ரக கஞ்சா கடத்தி வரப்படும். ஆனால் முதல் முறையாக, வியட்நாம் நாட்டில் இருந்து புரூனே வழியாக சென்னைக்கு போதைப் பொருள் கடத்தி வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## சென்னை | கம்ப்யூட்டர் வியாபாரியிடம் ஆடு வியாபார முதலீட்டு ஆசை காட்டி ரூ.87 லட்சம் மோசடி: மேலும் ஒருவர் கைது

**சென்னை, மார்ச்.26:** ஆடு வாங்கி விற்கும் தொழிலில் முதலீடு செய்தால் அதிக லாபம் தருவதாக கூறி, கம்ப்யூட்டர் வியாபாரியிடம் ரூ.87 லட்சம் மோசடி செய்த வழக்கில், தலைமறைவாக இருந்த மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.



சென்னை, மாதவரம், கில்பர்ன் நகரில் வசித்து வருபவர் ஜெகன் (44). அண்ணாசாலையில் உள்ள ஸ்பென்சர் பிளாசா வணிக வளாகத்தில் கணினி பழுது மற்றும் விற்பனை செய்யும் கடை நடத்தி வருகிறார்.

இவருக்கு 2020-ம் ஆண்டு திருமுல்லைவாயலைச் சேர்ந்த பால்ராஜூ (37), அவரது மனைவி தீபா (36), திரு.வி.க. நகரைச் சேர்ந்த இளவழகி (39) உட்பட 5 பேரின் அறிமுகம் கிடைத்தது.

இவர்கள் ஜெகன் வீட்டுக்கு வந்து ஆடு வாங்கி விற்கும் தொழிலில் முதலீடு செய்தால் அதிக லாபம் கிடைக்கும் என ஆசை வார்த்தை கூறினர். இதை உண்மை என நம்பிய ஜெகன், அதே ஆண்டு ஆகஸ்ட் மாதம் ரூ.10 லட்சம் கொடுத்தார்.

அடுத்த மாதமே ஆடு விற்பனை செய்ததில் உங்களுக்கு சேர வேண்டிய லாபம் என்று கூறி ரூ.80 ஆயிரத்தை கொடுத்தனர். மேலும் பங்குதாரராக சேர்ந்தால் கிடைக்கும் லாபத்தில் 50 சதவீதம் தருவதாகவும், ராஜஸ்தானில் இருந்து ஆடு வாங்கிக் கொண்டு வருவதற்கு சரக்கு வாகனம் வாங்க வேண்டும் என்றும் கூறினர்.

இதையடுத்து, ஜெகன் பல்வேறு தவணைகளாக ரூ.87 லட்சம் கொடுத்துள்ளார். ஆனால், அவருக்கு லாபப் பணம் கொடுக்கப்படவில்லை. அத்துடன், கொடுத்த பணத்தையும் திருப்பி தரவில்லை.

ஏமாற்றப்பட்டதை உணர்ந்த ஜெகன் இந்த விவகாரம் தொடர்பாக மாதவரம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்படி, போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர். இதில், பண மோசடி நடைபெற்றது உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து, குற்றச்சாட்டுக்கு உள்ளான பால்ராஜூ, அவரது மனைவி தீபா, இளவழகி ஆகிய 3 பேரை கடந்த 9-ம் தேதி கைது செய்தனர். இவ்வழக்கில் தலைமறைவாக இருந்த வியாசர்பாடி திரு.வி.க. தெருவை சேர்ந்த சக்திவேல் (51) என்பவரை நேற்றுமுன்தினம் கைது செய்து சிறையில் அடைத்தனர். இந்த வழக்கில் தொடர்புடைய மேலும் ஒருவரை போலீஸார் தொடர்ந்து தேடி வருகின்றனர்.

## 9 நாட்களில் ரூ.179 கோடி பணம், பொருட்கள் பறிமுதல்: தலைமை தேர்தல் அதிகாரி தகவல்

**சென்னை, மார்ச்.26:** தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: இந்திய தேர்தல் ஆணையம் மார்ச் 15-ம் தேதி பொதுத்தேர்தல் அறிவிப்பை வெளியிட்டதும் தேர்தல் நடத்தை விதிகள் உடனடியாக அமலுக்கு வந்துள்ளன.

இவை தமிழகத்தில் உள்ள 234 சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. நேற்று வரை, பொது இடங்களில் இருந்த 4,54,321 சுவர் விளம்பரங்கள், தனியார் இடங்களில் இருந்த 2,56,041 விளம்பரங்கள் அகற்றப்பட்டு, 544 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தேர்தல் நடத்தை விதிகளைத் தீவிரமாகக் கடைபிடிக்கவும், தேர்தல் விதிமீறல்களைத் தடுக்கவும் தமிழகம் முழுவதும் மொத்தம் 2,169 பறக்கும் படை குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் சி விஜில் செயலி மற்றும் பிற வழிகள் மூலம் பெறப்படும் புகார்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. முக்கிய இடங்கள் மற்றும் சோதனைச் சாவடிகளில் மொத்தம் 2,166 நிலையான கண்காணிப்புக் குழுக்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

பறக்கும்படை, நிலை கண்காணிப்புக் குழுக்கள் நடவடிக்கையில் இதுவரை, ரூ.34.64 கோடி ரொக்கம், ரூ.79 லட்சம் மதிப்பிலான மதுபானம், ரூ.6.76 கோடி மதிப்பிலான போதைப்பொருட்கள், ரூ.112.37 கோடி மதிப்பிலான தங்கம், வைரம், ரூ.24.22 கோடி மதிப்பிலான பரிசுப் பொருட்கள் மற்றும் இதர பொருட்கள் என ரூ.178.78 கோடி மதிப்பில் பணம் மற்றும் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

ஏப்.9-ம் தேதி காலை 7 மணி முதல் ஏப். 29-ம் தேதி மாலை 6.30 மணி வரை, வாக்குப்பதிவுக்கு பிந்தைய கருத்துக்கணிப்புகளை நடத்துவது மற்றும் அதனை அச்சு ஊடகம் அல்லது மின்னணு ஊடகம் வாயிலாக வெளியிடுவது அல்லது வேறு ஏதேனும் முறையில் பரப்புவது தடை செய்யப்படுகிறது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## தேர்தலை முன்னிட்டு சென்னையில் சிஎஸ்கே விளையாடும் இரு ஐபிஎல் கிரிக்கெட் போட்டிகளை வேறு தேதிக்கு மாற்றக்கோரி வழக்கு

**சென்னை, மார்ச்.26:** சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு சென்னையில் சூப்பர் கிங்ஸ் அணி பங்கேற்கும் இரு ஐபிஎல் கிரிக்கெட் போட்டிகளையும் வேறு தேதிகளுக்கு மாற்றக்கோரி, சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.



இது தொடர்பாக, சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதி வாக்காளர் டி.பிரபாகரன் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவில் குறிப்பிட்டுள்ளதாவது: தமிழகத்தில் சட்டப்பேரவை தேர்தல் வரும் ஏப்.23 அன்று நடைபெறவுள்ளது. தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் வரும் மார்ச் 30-ம் தேதி தொடங்குகிறது.

இந்நிலையில் ஏப்.4 மற்றும் ஏப்.11 ஆகிய தேதிகளில் சேப்பாக்கம் மைதானத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி பங்கேற்கும் கிரிக்கெட் போட்டிகள் நடைபெறவுள்ளது.

தேர்தல் நேரத்தில் சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெறவுள்ள போட்டிகளை வேறு தேதிக்கு மாற்ற உத்தரவிட வேண்டும்.

சென்னை சூப்பர் கிங்ஸ் அணி பங்கேற்கும் போட்டிகளை தேர்தல் முடிந்த பிறகு நடத்திக் கொள்ள ஐபிஎல் நிர்வாகத்துக்கு அறிவுறுத்த வேண்டும்.

சேப்பாக்கத்தில் கிரிக்கெட் போட்டி நடத்தப்பட்டால் கிரிக்கெட் போட்டியைக் காண வரும் ரசிகர்களுக்கும், கிரிக்கெட் வீரர்களுக்கும் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டிய கட்டாயம் போலீஸாருக்கு ஏற்படும்.

ஐபிஎல் போட்டிகளின் போது கிரிக்கெட் ரசிகர்கள் என்ற போர்வையில் மைதானத்துக்குள் தங்களது சின்னத்துடன் கட்சியினர் பிரச்சாரம் செய்வர் என்பதால் தேவையற்ற சட்டம் - ஒழுங்கு பிரச்சினை ஏற்படும்.

எனவே, ஏப்.4 மற்றும் ஏப்.11 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ள கிரிக்கெட் போட்டிகளை தமிழகத்தில் தேர்தல் முடிந்த பிறகு நடத்திக் கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்களை அறிவுறுத்த தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும்.

ஒருவேளை கிரிக்கெட் போட்டிகளுக்கான தேதிகளை மாற்ற முடியாது எனக் கூறினால் தேர்தல் நடத்தை விதிகளை கடுமையாக அமல்படுத்தவும், அரசியல் கட்சிகளின் சின்னங்கள், கொடிகள் என எதையும் மைதானத்துக்குள் உள்ளேயும், வெளியேயும் காட்சிப்படுத்த அனுமதிக்கக் கூடாது என ஐபிஎல் நிர்வாகத்துக்கு உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் தெரிவித்துள்ளார்.

இந்த மனு விரைவில் விசாரணைக்கு வரவுள்ளது.

## ரயில் ஓட்டுநர் ஓய்வறைகளில் காஸ் சிலிண்டர் தட்டுப்பாடு: சுகாதாரமான உணவு கிடைப்பதில் சிக்கல்

**சென்னை, மார்ச்.26:** ரயில் ஓட்டுநர் ஓய்வறைகளில் காஸ் சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், ஓட்டுநர்களுக்கு சுகாதாரமான உணவு கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. எனவே, இங்கு முன்னுரிமை அடிப்படையில், காஸ் சிலிண்டர் வழங்க மத்திய அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



மத்திய கிழக்கு நாடுகளில் நடைபெறும் போரால், இந்தியாவில் காஸ் சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வீட்டு உபயோக சிலிண்டர்கள் வழங்கப்பட்டாலும், வணிகப் பயன்பாட்டுக்கான காஸ் சிலிண்டர் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால், பல இடங்களில் உணவகங்கள் மூடப்பட்டுள்ளன. இதற்கிடையே, காஸ் சிலிண்டர்கள் தட்டுப்பாடு ரயில் ஓட்டுநர்களின் ஓய்வறைகளில் தற்போது எதிரொலிக்கத் தொடங்கியுள்ளது.

வெளியூர்களுக்கு ரயில்களை இயக்கும் ரயில் ஓட்டுநர்கள், கார்டுகள் பணி முடிந்து ஓய்வெடுக்க வசதியாக, நாடு முழுவதும் 558 ரயில் ஓட்டுநர் ஓய்வறைகள் உள்ளன.தெற்கு ரயில்வேயில், சென்னை எழும்பூர், சென்ட்ரல், சென்னை கடற்கரை, தாம்பரம், திருவொற்றியூர், ஈரோடு, திருச்சி, விழுப்புரம், மதுரை, காட்பாடி, சேலம், கோவை உள்பட பல்வேறு இடங்களில் ஓட்டுநர் ஓய்வறைகள் உள்ளன.

உயர் தரத்தில் பராமரிக்கப்படும் இந்த அறைகளில் அவர்களுக்கு மானிய விலையில் சுகாதாரமான உணவு வழங்கப்படுகிறது. தற்போது, ரயில் ஓட்டுநர் ஓய்வறைகளில் காஸ் சிலிண்டர் தட்டுப்பாட்டால், அவர்களுக்கு உணவு கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து, தெற்கு ரயில்வே பொது மேலாளருக்கு தட்சிண ரயில்வே ஊழியர்கள் சங்க பொதுச்செயலாளர் ஏ.எம். பேபிஷக்கிலா கடிதம் எழுதியுள்ளார். அதில், ரயில்வே கோட்டங்களில் உள்ள பல்வேறு ஓய்வறைகளில் *(Running Rooms)* ஓட்டுநர் மற்றும் இயக்கப் பணியாளர்களுக்கு உணவு கிடைக்காத காரணத்தினால், தற்போது கடுமையான சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

ரயில் ஓட்டுநர்கள் தங்கள் பணி மற்றும் ஓய்வு நேரங்களில் குறித்த நேரத்துக்கு சுகாதாரமான உணவு கிடைப்பதற்கு ஓய்வு அறையையே முழுமையாகச் சார்ந்திருக்கின்றனர். தற்போதைய சூழல் பணியாளர்களுக்குப் பெருத்த சிரமத்தையும், மன உளைச்சலையும் ஏற்படுத்தியுள்ளது.

ஏனெனில், நீண்ட மற்றும் களைப்பூட்டும் பணி நேரங்களுக்குப் பிறகு அவர்களால் முறையான உணவைப் பெற இயலவில்லை. இது அவர்களின் உடல்நலன், பணிச் செயல்பாட்டை பாதிக்கும் எனவே, ஓட்டுநர் ஓய்வறைகளில் காஸ் சிலிண்டர் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும். தேவையான உணவு தயாரித்து வழங்குவதை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

இது குறித்து, ஓய்வுபெற்ற ரயில்வே தொழிற் சங்கத் தலைவர் மனோகரன் கூறுகையில், “ரயில் ஓட்டுநர்கள் ஓய்வறைகள் ஏ,பி,சி என்றும் தரம் பிரிக்கப்பட்டுள்ளன. இந்த ஓய்வறைகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் காஸ் சிலிண்டர் வழங்க வேண்டும்” என்றார்.

## அண்ணாநகர் சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கு: தினந்தோறும் விசாரித்து முடிக்க ஐகோர்ட் உத்தரவு

**சென்னை, மார்ச்.26:** அண்ணாநகர் சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கை தினந்தோறும் விசாரித்து விரைவாக முடிக்க வேண்டுமென போக்சோ சிறப்பு நீதிமன்றத்துக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை அண்ணாநகரில் 10 வயது சிறுமி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டார். இதுதொடர்பாக புகார் அளிக்கச் சென்ற பெற்றோரை அண்ணா நகர் அனைத்து மகளிர் போலீஸார் தாக்கிய சம்பவம் தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றம் தாமாக முன்வந்து வழக்காக விசாரித்தது.

இதேபோல பாதிக்கப்பட்ட தங்களுக்கு உரிய இழப்பீடு வழங்கக்கோரியும், தவறு செய்த போலீஸார் மீது நடவடிக்கை எடுக்கக்கோரியும் சிறுமியின் தாயாரும் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்குகளை விசாரித்த நீதிபதிகள் பி.வேல்முருகன், எம்.ஜோதிராமன் ஆகியோர் அடங்கிய அமர்வு, “அண்ணாநகர் சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கை போக்சோ சிறப்பு நீதிமன்றம் தினந்தோறும் விசாரித்து விரைவாக முடிக்க வேண்டும். இதேபோல பாதிக்கப்பட்ட தங்களுக்கு உரிய இழப்பீடு வழங்கக்கோரியும், தவறு செய்த போலீஸார் மீது நடவடிக்கை எடுக்கக்கோரியும் சிறுமியின் தாயாரும் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்குகளை விசாரித்த நீதிபதிகள் பி.வேல்முருகன், எம்.ஜோதிராமன் ஆகியோர் அடங்கிய அமர்வு, “அண்ணாநகர் சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கை போக்சோ சிறப்பு நீதிமன்றம் தினந்தோறும் விசாரித்து விரைவாக முடிக்க வேண்டும்.

வழக்கின் புலன் விசாரணை மற்றும் நீதிமன்ற விசாரணை போக்சோ விதிகளுக்கு உட்பட்டு நடப்பதை நீதிமன்றம் உறுதி செய்ய வேண்டும்.

வன்கொடுமைக்கு உள்ளான சிறுமியின் அடையாளத்தை பொதுவெளியில் அம்பலப்படுத்திய போலீஸ் அதிகாரிகளுக்கு எதிராகப் பதியப்பட்ட வழக்கை உயர் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட சிறப்பு புலனாய்வுக் குழு நியாயமான முறையில் பாரபட்சமற்ற முறையில் விசாரிக்க வேண்டும்.

பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ஏற்கெனவே ரூ. 4 லட்சம் இடைக்கால இழப்பீடாக வழங்க உத்தரவிடப்பட்டுள்ள நிலையில், இறுதி இழப்பீட்டுத் தொகையை போக்சோ சிறப்பு நீதிமன்றம் பரிசீலித்து உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

அதேபோல காவல் துறை அதிகாரிகளுக்கு எதிரான துறை ரீதியிலான விசாரணையை தமிழக அரசு சுதந்திரமாக மேற்கொண்டு விரைந்து முடிக்க வேண்டும்.

பாதிக்கப்பட்ட சிறுமி, அவரது குடும்பத்துக்கு உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும்” என உத்தரவிட்டுள்ளனர்.

## பங்குனி பெருவிழாவை முன்னிட்டு மயிலாப்பூர் பகுதியில் போக்குவரத்து மாற்றம்

**சென்னை, மார்ச்.26:** பங்குனி பெருவிழாவை முன்னிட்டு அடுத்த மாதம் 1-ம் தேதி வரை மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயில் பகுதிகளில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

சென்னை மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயில் பங்குனிப் பெருவிழா நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் தொடங்கியது.

வரும் 29-ம் தேதி காலை 6 மணிக்கு தேரோட்டமும், அடுத்த நாளான 30-ம் தேதி மதியம் 2.30 மணிக்கு அறுபத்து மூவர் உற்சவமும் நடைபெறுகிறது.

அடுத்த மாதம் 1-ம் தேதி வரை பல்வேறு விழாக்கள் அடுத்தடுத்து நடைபெற உள்ளன. இவ்விழாக்களை முன்னிட்டு ஒவ்வொரு உற்சவமும் தொடங்கும் நேரம் முதல் நிறைவடையும் வரை பக்தர்களின் வருகை எண்ணிக்கைக்கு ஏற்ப போக்குவரத்து மாற்றங்கள் அமல்படுத்தப்பட உள்ளதாக சென்னை போக்குவரத்து போலீஸார் அறிவித்துள்ளனர்.

குறிப்பாக, கபாலீஸ்வரர் கோயிலை சுற்றியும், அதன் போக்குவரத்து வழித்தடங்களிலும் போக்குவரத்து மாற்றம் அமல்படுத்தப்பட உள்ளது.

மேலும், கோயில் அருகே பக்தர்களின் வசதிக்காக வாகனங்களை நிறுத்துவதற்கான வசதிகளும் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## பேரவைத் தேர்தலை புறக்கணிக்காமல் வாக்களிக்க முடிவு: பரந்தூர் விமான நிலைய எதிர்ப்பு குழு அறிவிப்பு

**காஞ்சிபுரம்கா, மார்ச்.26:** காஞ்சிபுரம் மாவட்டம் பரந்தூரில் அமையவுள்ள புதிய விமான நிலையத் திட்டத்தைக் கைவிடக் கோரி, மக்கள் நீண்ட காலமாகத் தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக, கடந்த 2024-ம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின் போது, போராட்டக் குழுவினரின் ஒருமித்த முடிவின்படி தேர்தலை புறக்கணித்தனர்.

இந்நிலையில், ஏப்ரல் மாதம் நடைபெற உள்ள சட்டப்பேரவைத் தேர்தல் குறித்துப் போராட்டக் குழுவின் முக்கிய ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தின் முடிவுகள் குறித்துப் போராட்டக் குழுவின் தலைவர் க.சுப்பிரமணியன், செயலாளர் எஸ்.டி.கதிரேசன் வெளியிட்டுள்ள அறிக்கை: கடந்த மக்களவைத் தேர்தலைப் புறக்கணித்தது போலவே இந்தத் தேர்தலையும் புறக்கணிக்க முதலில் ஆலோசிக்கப்பட்டது.

ஆனால், எங்கள் போராட்டக் களத்துக்கு நேரில் வந்து, சட்டப் போராட்டங்களுக்குப் பல்வேறு வகைகளில் உதவி செய்து வரும் சில அரசியல் கட்சிகள், தேர்தலைப் புறக்கணிக்க வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டுள்ளன.

போராட்டக் குழு முன்னெடுக்கும் முயற்சிகளுக்குத் துணையாக நிற்கும் தங்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என அவர்கள் தரப்பில் கோரிக்கை வைக்கப்பட்டது.

இதனை ஏற்று, இந்த சட்டப்பேரவைத் தேர்தலைப் புறக்கணிப்பதில்லை எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. போராட்டக் களத்துக்கு நேரில் வந்து உறுதுணையாக இருக்கும் கட்சிகளுக்கு முழுமையான ஆதரவை அளித்து வாக்களிப்பது எனவும் முடிவு செய்யப்பட்டது. அதன்படி, மக்கள் தேர்தலில் பங்கேற்று தங்களது வாக்குகளைப் பதிவு செய்வார்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தமிழக மீனவர்கள் 2 பேரை விடுவித்தது இலங்கை நீதிமன்றம்



**ராமேசுவரம், மார்ச்.26:** ராமேசுவரம் மீன்பிடித்துறை முகத்திலிருந்து கடலுக்குச் சென்ற வரப்பிரசாதம் என்பவரது விசைப்படகையும், படகிலிருந்த கம்ன்ஸ்டன் ராஜ், மினிட்டோ ராயப்பன் ஆகிய 2 மீனவர்களையும் தலை மன்னார் அருகே இலங்கை கடற்படையினர் கடந்த மார்ச் 5 அன்று கைது செய்து நீதிமன்ற காவலில் சிறையில் அடைத்தனர். இந்நிலையில் நேற்று கிளி நொச்சி நீதிமன்ற நீதிபதி, மீண்டும் இலங்கை எல்லைக்குள் மீன் பிடித்தால் அபராதம் மற்றும் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என்ற நிபந்தனைவிதித்துவிடுதலை செய்து உத்தரவிட்டார்.

அவர்கள் இன்னும் ஓரிரு நாட்களில் தாயகம் திரும்புவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

## காரைக்குடியில் தனியார் தொலைக்காட்சி விவாத நிகழ்ச்சியில் மோதல்

# திமுக துணை மேயர், அதிமுக பிரமுகர்கள் மீது வழக்கு



**காரைக்குடி, மார்ச்.26:** காரைக்குடியில் தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சியின்போது நடந்த மோதல் தொடர்பாக திமுக பேரூராட்சித் தலைவர், துணை மேயர், அதிமுக முன்னாள் எம்எல்ஏ உட்பட 137 பேர் மீது வழக்குப் பதியப்பட்டது.

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி மகர்நோன்பு திடலில் நேற்று முன்தினம் இரவு தனியார் தொலைக்காட்சி சார்பில் தேர்தல் விவாத நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில், திமுக மாவட்ட துணைச் செயலாளரும் திருப்புவனம் பேரூராட்சித் தலைவருமான சேங்கைமாறன், அதிமுக முன்னாள் எம்எல்ஏ உமாதேவன், நாம் தமிழர் கட்சி மாநில நிர்வாகி இடும்பாவனம் கார்த்திக் ஆகியோர் பங்கேற்றனர்.

அப்போது அதிமுக, திமுக தரப்பினர் தங்களது ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற வளர்ச்சித் திட்டங்களை எடுத்துரைத்தனர். தொடர்ந்து இடும்பாவனம் கார்த்திக் பேசிய போது தெரிவித்த சில கருத்துகளுக்கு திமுக கூட்டணிக் கட்சியினர் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதில், திமுக மாவட்ட துணைச் செயலாளரும் திருப்புவனம் பேரூராட்சித் தலைவருமான சேங்கைமாறன், அதிமுக முன்னாள் எம்எல்ஏ உமாதேவன், நாம் தமிழர் கட்சி மாநில நிர்வாகி இடும்பாவனம் கார்த்திக் ஆகியோர் பங்கேற்றனர்.

அப்போது அதிமுக, திமுக தரப்பினர் தங்களது ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற வளர்ச்சித் திட்டங்களை எடுத்துரைத்தனர். தொடர்ந்து இடும்பாவனம் கார்த்திக் பேசிய போது தெரிவித்த சில கருத்துகளுக்கு திமுக கூட்டணிக் கட்சியினர் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

அப்போது அதிமுக முன்னாள் எம்எல்ஏ கே.கே.உமாதேவன் நாம் தமிழர் கட்சிக்கு ஆதரவாக பேசியதால் மோதல் ஏற்பட்டது. இதில் மூவர் காயமடைந்தனர்.

இதுகுறித்து நாம் தமிழர் கட்சியைச் சேர்ந்த இளங்கோ அளித்த புகாரின்பேரில், திமுக மாவட்டத் துணைச் செயலாளர் சேங்கைமாறன், துணை மேயர் குணசேகரன், மதிமுக மாவட்டச் செயலாளர் பசும்பொன் மனோகரன் மற்றும் திமுக மாநகராட்சி கவுன்சிலர்கள், நிர்வாகிகள், காங்கிரஸ் நிர்வாகிகள் உட்பட 16 பேர் மீது காரைக்குடி தெற்கு போலீஸார் வழக்குப் பதிந்தனர்.

அதேபோல் திமுக துணை மேயர் குணசேகரன் அளித்த புகாரின்பேரில், அதிமுக முன்னாள் எம்எல்ஏ கே.கே.உமாதேவன், நகரச் செயலாளர் மெய்யப்பன் மற்றும் அதிமுக, பாஜக, நாம் தமிழர் கட்சி நிர்வாகிகள் உட்பட 121 பேர் மீது வழக்குப் பதிந்தனர்.

# குற்ற வழக்கில் விடுதலையான ஊழியரின் சஸ்பெண்ட் காலத்தை பணி காலமாக கருத ஐகோர்ட் உத்தரவு

**மதுரை, மார்ச்.26:** குற்ற வழக்கில் விடுதலையான அரசு ஊழியரின் பணியிடை நீக்க காலத்தை பணிக் காலமாக கருதி ஊதியம் மற்றும் பணப்பலன் வழங்க வேண்டும் என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்த பலராமன் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு: மின்வாரியத்தில் உதவி செயற்பொறியாளராக பணிபுரிந்தேன். என் மீது லஞ்ச ஒழிப்பு போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர்.


இதனால் 2010 அக் .20-ல் பணியிடை நீக்கம் செய்தனர். இந்நிலையில் குற்றவழக்கில் என்னை நீதிமன்றம் 2022 ஜூன் 30-ல் விடுதலை செய்தது.


இருப்பினும் என் பணியிடை நீக்க காலம் ஈட்டிய விடுப்பாகவும், ஊதியமில்லா விடுப்பாகவும் அறிவிக்கப்பட்டது. இதை ரத்து செய்து ஊதியம் மற்றும் பணப்பலன்களை வழங்க உத்தரவிட வேண்டும். இவ்வாறு கோரியிருந்தார்.


மனுவை நீதிபதி மும்மினேனி சுதீர் குமார் விசாரித்து பிறப்பித்த உத்தரவு:

மனுதாரர் குற்ற வழக்கில் இருந்து முழுமையாக விடுவிக்கப்பட்டதால் பணியிடை நீக்கம் செய்யப்பட்ட நாள் முதல் ஓய்வுபெற்ற நாள் வரையிலான பணியிடை நீக்க காலத்தை பணிக்காலமாக கருதி முழுச்சம்பளம், பணப்பலன்களை பிழைப்பூதியத்தை கழித்து 2 மாதத்தில் வழங்க வேண்டும்.

# தயாபுரம் முத்து மாரியம்மன் புற்றுக் கோவிலில் பங்குனி விழாவில் ஏராளமான பக்தர்கள் தீ மிதித்து வழிபாடு செய்தனர்







**மானாமதுரை, மார்ச்.26:** சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் பிரசித்தி பெற்ற காட்டுஉடைகுளம் தயாபுரம் அருள்மிகு ஸ்ரீ முத்து மாரியம்மன் புற்றுக் கோவிலில் ஆண்டுதோறும் பங்குனி பொங்கல் விழா நடக்ஷ 44 ஆம் ஆண்டு பங்குனி பொங்கல் விழா அம்மனுக்கு காப்பு கட்டுதலுடன் தொடங்கியது.


காலை சிறப்பு கணபதி ஹோமம் அதைத் மாரியம்மனுக்கு பதினாறு வகையான அபிஷேகம் செய்து வெள்ளி கவசம் சாற்றி சிறப்பு பூஜைகள் நடைபெற்றது.

முக்கிய நிகழ்ச்சியான பங்குனி பொங்கல் விழாவில் ஏராளமான பக்தர்கள் மானாமதுரை வைகை ஆற்றில் இருந்து புறப்பட்டு கோவில் ஸ்தானீகர் சுப்பிரமணியன் பூசாரி தலைமையில் தீச்சட்டி, பால்கு டம்,பூ கரகம் எடுத்து கோவில் முன்பு உள்ள அக்கினி குண்டத்தில் தீ மிதித்து வழிபாடு செய்தனர்.

அப்பகுதியை சேர்ந்த பக்தர்கள் சார்பில் மண்டகப் படிகளும், கலை நிகழ்ச்சிகளும் நடை பெற்றது. பத்து நாட்கள் விழா ஏற்பாடுகளை கோவில் டிரஸ்ட் சார்பில் எஸ்பி. சுப்பிரமணியன், எஸ்பி. நாகராஜன், எஸ்பி.முருகன் மற்றும் விழா குழுவினர் செய்து வருகின்றனர். வரும் 28 ந்தேதி சனிக்கிழமை சிறப்பு அன்னதானம் நடைபெறுகிறது.

# மானாமதுரை மாரியம்மன் கோவில் மகா கும்பாபிஷேகம் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வழிபாடு செய்தனர்









**மானாமதுரை, மார்ச்.26:** சிவகங்கை மாவட்டம் மானாமதுரை மாரியம்மன் கோவில் தெருவில் உள்ள பழமை வாய்ந்த பிரசித்தி பெற்ற மாரியம்மன் கோவில் உள்ளது.இக்கோவில் சமயபுரம் மாரியம்மன் சேந்தாகுடிமழை மாரியம்மன் பிடிமண் கோவிலாகும். இக் கோவில் திருப்பணிகள் செய்யப்பட்டு கும்பாபிஷேக விழா விற்காக காலை கணபதி ஹோமமும் அதனைத் தொடர்ந்து மாலை யாகசாலை பூஜை களும் தொடங்கியது.

நான்கு கால யாகசாலை பூஜைகள் முடிவு பெற்று சிவாச்சாரியார்கள் யாகத்தில் வைத்து பூஜை செய்த படங்களை எடுத்துக் கொண்டு கோவில் வலம் வந்து விமான கோபுரம் கலசங்களில் பூஜை செய்து புனித தீர்த்தத்தால் கும்பாபிஷேகம் செய்தனர் . .இதனைத் தொடர்ந்து அம்மனுக்கு மகா அபிஷேக, ஆராதனை, பூஜை நடைபெற்றது.

ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மன் வழிபாடு செய்தனர். மாரியம்மன் கோவில் திருப்பணி வேலைகளை ஸ்தபதி பாண்டி செய்து இருந்தார்.விழா ஏற்பாடுகளை விழா கமிட்டியினர் திருக்கோவில் பரம்பரை டிரஸ்டி விஜிபோஸ் விழா குழுவினர் மற்றும் பக்தர்கள் செய்து வருகின்றனர்.

# திருப்பூர் மாவட்ட நீதிமன்றத்தில் சரணடைய வந்த விவசாயிகள் உள்ளிட்ட 80 பேர் கைது



**திருப்பூர், மார்ச்.26:** திருப்பூர் மாவட்டம் பெருந்தொழுவு, கத்தாங்கன்னி, நாச்சிபாளையம் ஆகிய பகுதிகளில் செயல்பட்டு வரும் தார் தொழிற்சாலைகள், ரெடிமிக்ஸ் ஆலைகள், கல்குவாரிகளில் அனுமதிக்கப்பட்ட அளவைக் காட்டிலும் பல மடங்கு கனிம வளங்கள் வெட்டி எடுக்கப்பட்டு கடத்தப்படுவதாகப் புகார் எழுந்துள்ளது.

இதனால் பல கோடி செலவில் போடப்பட்டுள்ள தார்சாலைகள் சேதமடைவதாகக் கூறி அப்பகுதி பொதுமக்கள், விவசாயிகள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதுதொடர்பாக மாவட்ட நிர்வாகத்திடம் புகார் அளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று கூறப்படுகிறது. இதைக் கண்டித்தும் ஏற்கெனவே போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

இந் நிலையில், பொது சொத்துக்களான சாலைகள் அழிக்கப்படுவதைத் தடுக்கத் தவறியதால் நாங்களே குற்றவாளிகள் எனக்கூறி பெருந்தொழுவு, நாச்சிபாளையம் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் திருப்பூர் மாவட்ட நீதிமன்றத்தில் சரணடைய முயன்றனர்.

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து ஊர்வலமாகப் புறப்பட்ட 80 பேரை திருப்பூர் தெற்கு போலீஸார் தடுத்து நிறுத்தி கைது செய்தனர்.

பின்னர் தனியார் திருமண மண்டபத்தில் தங்க வைத்தனர். இந்த சம்பவம் காரணமாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சுமார் ஒரு மணி நேரம் பரபரப்பு ஏற்பட்டது.




# விசிகவுக்கான தொகுதி எண்ணிக்கையில் மனநிறைவு தான்: திருமாவளவன் பேட்டி

**சென்னை, மார்ச்.26:** இடதுசாரி ஜனநாயக அரசியல் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதால் விசிகவுக்கான தொகுதி எண்ணிக்கையில் மனநிறைவு தான் என்று திருமாவளவன் கூறினார். சென்னை அண்ணா அறிவாலயத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் எம்பி நேற்று அளித்த பேட்டி: மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியில் விசிகவுக்கு 8 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. 7, 8 ஆண்டுகளாக தொடர்ந்து கட்டுக்கோப்போடு இயங்கும் கூட்டணி.

தமிழ்நாட்டில் மட்டுமல்ல, அகில இந்திய அளவில் மதவெறி, சாதிவெறி, வலுதுசாரி சக்திகள் வலுப்பெறுவதை தடுக்க வேண்டும். நாட்டையும், மக்களையும் மதவாத எதிர்ப்பு அரசியலில் இருந்து பாதுகாக்க வேண்டும் என உறுதியேற்று செயல்படும் கூட்டணி. இந்த கூட்டணியின் வெற்றியை முன்னிறுத்தி அனைத்து கோணங்களிலும் நல்லது, கெட்டதை சீர்தூக்கி பார்த்து, விசிகவின் நலன் எவ்வளவு முக்கியமோ, அந்தவகையில் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கூட்டணியின் நலனும் முக்கியம் என கருதி இந்த முடிவுக்கு விசிக உடன்பட்டு இருக்கிறது.

தொடர்ந்து திமுகவோடு நாங்கள் பயணிப்பதற்கு மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியில் பயணிக்க முதன்மையான காரணம், இடதுசாரி ஜனநாயக அரசியல் தமிழ் மண்ணில் பாதுகாக்கப்படவேண்டும் என்பதுதான். என்னுடைய பார்வையில் விசிகவுக்கு கிடைத்திருக்கும் 8 தொகுதிகள், கம்யூனிஸ்டுகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் 10 தொகுதிகளையும் சேர்த்து 18 தொகுதிகள், இதுதவிர முஸ்லிம் அமைப்புகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் தொகுதிகள் இடதுசாரி அரசியலை பாதுகாக்க போராடக்கூடிய இயக்கங்களுக்கு தி.மு.க. வழங்கியிருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

# சசிகலா – ராமதாஸ் கூட்டணியால் அதிமுகவுக்கு எந்த பாதிப்பும் இல்லை: எடப்பாடி பழனிசாமி உறுதி

**சென்னை, மார்ச்.26:** அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேற்று அதிமுக தேர்தல் அறிக்கையை வெளியிட்டு நிருபர்களிடம் கூறியதாவது: அதிமுக சார்பில் 297 திட்டங்களை தேர்தல் அறிக்கையாக வெளியிட்டுள்ளோம். இதை நிறைவேற்ற, தமிழகத்தின் நிதி ஆதாரத்தை சரியான முறையில் கையாண்டு நிதியை அதிகப்படுத்துவோம். இதன்மூலம் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்துவோம். கொரோனா காலத்தில் வருவாய் இல்லாமல் இருந்தபோது, திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தினோம்.

கடந்த தேர்தலில் திமுக தேர்தல் அறிக்கை கதாநாயகனாக இருக்கலாம், ஆனால் இந்த தேர்தலில் அதிமுக தேர்தல் அறிக்கைதான் கதாநாயகன். அறிவிக்கப்பட்டுள்ள அறிவிப்புகள் முழுமையாக நிறைவேற்றப்படும். ஜி.கே.வாசன், ஐஜேகே, ஜெகன்மூர்த்தி உள்ளிட்ட கட்சிகளுக்கு இன்று (நேற்று) அல்லது நாளைக்குள் தொகுதி பங்கீடு இறுதி செய்யப்பட்டு விடும்.

புதிதாக வேறு கட்சிகள் அதிமுக கூட்டணிக்கு வர வாய்ப்பு இல்லை. புதிய தமிழகம் எங்களோடு பேசினார்கள். ஆனால், அவர்கள் சொன்னதை நிறைவேற்ற முடியாததால் கூட்டணிக்குள் வர முடியவில்லை. சாத்தான்குளம் கொலை வழக்கில், தவறு செய்தவர்கள் தண்டிக்கப்பட்டால் அதிமுக வரவேற்கும். அதிமுக எந்த குற்றவாளிகளையும் காப்பாற்றாது.

அதிமுக கூட்டணியில் அங்கும் வகிக்கும் கட்சிகளுக்கு விரைவில் எந்தெந்த தொகுதி ஒதுக்கீடு செய்யப்பட்டது என்று அறிவிக்கப்படும். பிரசாரத்தை நாளை (இன்று) தொடங்குகிறேன். நாங்கள் விரைவாக செயல்பட்டு வருகிறோம். சசிகலா - ராமதாஸ் கூட்டணியால் அதிமுகவுக்கு எந்த பாதிப்பும் இல்லை. இவ்வாறு அவர் கூறினார். நிலைக்கு ஏற்ப தொகுதிகள் வழங்கப்படுகிறது என்றார்.

# கனிமொழிக்கு சீட் கொடுக்காதவர்கள் எப்படி கம்யூனிஸ்ட் கட்சிக்கு கொடுப்பார்கள்? – சீமான் கேள்வி

**சென்னை, மார்ச்.26:** “கருணாநிதியின் மகள் கனிமொழிக்கு சீட் கொடுக்காதவர்கள் எப்படி கம்யூனிஸ்ட் கட்சிக்கு கொடுப்பார்கள்?” என்று நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கேள்வி எழுப்பினார்.

வேலூர் மாவட்டத்தில் போட்டியிடும் நாதக வேட்பாளர்களுக்கு ஆதரவாக அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் நேற்று வேன் பிரச்சாரத்தில் ஈடுபட்டார். பின்னர் அவர், செய்தியாளர்களிடம் கூறும்போது, “கனிமொழி மாநில அரசியலில் வருவதற்கும் அவர்கள் வெற்றிபெறுவதையும் யார் எதிர்ப்பார்கள் என்று உங்களுக்குத் தெரியும். கருணாநிதியின் மகள் கனிமொழிக்கு சீட் கொடுக்காதவர்கள் எப்படி கம்யூனிஸ்ட் கட்சிக்கு கொடுப்பார்கள்? அவர்களும் ஒரு சீட் அதிகமாக கொடுங்க. கொடுங்க என்று கேட்டார்கள். கனிமொழி ஆளுமையுள்ள பெண். மாநில அரசியலுக்கு வரும்போது உதயநிதியை முன்னிறுத்த இடையூறாக இருக்கும் என்று நினைப்பார்கள். எனவே, அவரை வரவிட மாட்டார்கள். என்னதான் இருந்தாலும் அவர் உடன்பிறந்த குடும்பத்து பெண் இல்லை என்று நினைப்பார்கள்.

தவாக தலைவர் வேல்முருகன் ஒரு நிலைப்பாட்டை எடுத்துள்ளார். அதற்கு கருத்துச் சொல்ல விரும்பவில்லை. அவர் இப்போதாவது சொல்கிறாரே என்று பாராட்ட வேண்டும். ஒரு சீட்டுக்காக சரணடைந்து சகித்துப் போகாமல் பேசியுள்ளாரே என்று பாராட்டுங்கள். அய்யா ராமதாஸை மக்கள் கைவிடுவார்கள் என்று யாரும் நினைக்கவில்லை. நானெல்லாம் அவரது பிள்ளை. 85 வயதில் தமிழை தேடி யாராவது நடப்பார்களா? தமிழகத்தில், சமூக நீதியை அவரைத்தாண்டி யாராவது பேசி இருக்கிறார்களா? இந்த நாட்டில் ஈ.வெ.ரா என்ன செய்தார்?

இந்த நாட்டில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் பேசுவது ராமதாஸ் மட்டும்தான். அவரது கனவை பிள்ளையாக நான் செய்கிறேன். இந்த வயதிலும் இந்த நாட்டுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற அவரது எண்ணத்தை பாராட்ட வேண்டும். இன்றும் அவர் உட்கார்ந்து பேசி இயங்குகிறார் இல்லையா? தமிழ்நாட்டில் மொத்த கட்சி கூட்டணியை இந்த ஒத்த கட்சி மோதி வெல்லும். மொத்தத்தில் வீரம் வேண்டும் சுடலைமாடா.

மத்திய அரசின் தனியார்மயம், தாராளமயம் உலகமயத்தில் ஒவ்வொரு நாட்டையும் சார்ந்திருந்ததால் இன்று காஸ் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. காஸ் உற்பத்தியில் தன்னிறைவு ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லும் என்னை நீங்கள் தேர்ந்தெடுக்கவில்லை. பேரிடர் காலத்தில் சிலிண்டர் இல்லை, எரிபொருள் தட்டுப்பாடு. பெட்ரோல், டீசல் இல்லாவிட்டால் வண்டியை விட்டுவிட்டுப் போக வேண்டியதுதான். நான் கூட மிதிவண்டியில் ஓட்டு கேட்க போகலாம் என்று இருக்கிறேன். நாங்கள் ரொம்பவே தயாராக இருக்கிறோம்” என்றார்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com